# ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தன ... 10—12—53 [இதழ் 1

உ. வே. சாமிநாத

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்

தேவாரவகுப்பு ஆண்டுவிழா திருமுறை மாநாட்டி...



திருமுறை ஊர்வலம்

...லைவர் : திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L.,

...யர் : நாகலிங்கத் தம்பிரான்.

...ஆசிரியர் : தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீன...

## பாம்பு தீண்டிய பக்தர் பிழைத்தார்

### விடந்தீர்த்த பதிகம் பாடியவுடன் குணம்பெற்ற அதிசயம்.

வத்திராயிருப்பு : சைவசித்தாந்த சபையின் சார்பாகச் சித்தி விநாயகர் கோயிலில் பஜனை நடந்துகொண்டிருக்கும் சமயம், பஜனைக் கோஷ்டியில் ஒருவரான கடவுள் என்ற வி. கிருஷ்ணதேவருக்கு விஷப் பாம்புகடித்து விஷமேறி இம்சைபடும் சமயம், மேற்படி கோஷ்டியின் ஒருவரான திரு. முத்துசாமி ஓதுவாமூர்த்தி அவர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த "விடந்தீர்த்த பதிகம்" என்னும் பண் பாடியவுடன் விஷம் இறங்கிக் குணத்திற்குவந்தது. இவ்வதிசயத் தைக்கண்ட இவ்வூர் சித்த வைத்தியரும், காசி விசுவநாதசுவாமி கோயில் மாஜி டிரஸ்டியுமான திரு. எம். திருவெங்கடேசன் அவர்கள் இப்பதிகத்தை அருளிச்செய்த திருநாவுக்கரசு சுவாமிகள் விக்கிரகம் ஒன்று செய்து, கட்டிடமும் கட்டித்தர வாக்குறுதியளித்தார்.

## மேகராகம் பாட மழை கொட்டியது

வத்திராயிருப்பில் சைவசித்தாந்த சபையின் சார்பாக மழைக்காக சில தினங்களாகப் பிரார்த்தனை நடத்தி, மேகராகக்குறிஞ்சிப் பதிகம் பாடிவருவதுடன், சபைக் காரியதரிசி திரு. சங்கரம்பிள்ளை அவர்கள் தமது இல்லத்தில் 600 பேருக்கு அன்னதானம் அளித்ததும் பெரு மழை பெய்தது. இங்குள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர்வந்துள்ளது.

*தினமணி, 9—11—52.*

## திருக்கடவூரில் சோமவாரப் பிரசங்கம்

ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் தேவஸ்தானம் பிரசாரசபா மண்டபத்தில் 17—11—52ல் வித்வான் ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "காலன் அறிந்த கழல்" என்பது பற்றியும், ஆதீனக் கல்லூரி மாணவர் திரு. சொ. சிங்காரவேலன் "கற்கண்டு" என்பதுபற்றியும், 24—11—52ல் வித்வான், திரு. வை. திருஞானசம்பந்தம் "வேண்டுவது" என்பதுபற்றியும், மாணவர் S. சேனுபதி "அப்பரும் அரசரும்" என்பதுபற்றியும், 8—12—52ல் வித்வான், திரு. V. S. குருசாமி "இலக்கியங்களும் இறைவழிபாடும்" என்பதுபற்றியும், மாணவர் A. இராமலிங்கம் "மாண்புறு செயல்கள்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஒவ்வொரு சோமவாரத்திலும் காலையிலும் மாலையிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எழுந்தருளியாகி, விசேஷ அபிஷேக ஆராதனை செய்வித்துத் தரிசனம் செய்தருளினார்கள். இறைவன் திருவீதியுலாக் காட்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## குடிதண்ணீர்க் குழாய்த் திறப்புவிழா.



திறப்பாளர்: திரு. C. மருதவாணம் பிள்ளை அவர்கள், M. L. C. மாயூரம்.

*14—11—52.*

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தன௵ கார்த்திகைமீ 10—12—52. [இதழ் 1

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## தொடங்குகிறது : : ஞானசம்பந்தத்திற்குப் பன்னிரண்டு வயது.

எல்லாம்வல்ல சொக்கலிங்கப்பெருமான் திருவருளால்—குருஞானசம்பந்தப்பெருமான் பெருங்கருணையால் ஞானசம்பந்தம் அவதரித்து இன்று பதினேராம் ஆண்டு நிறைந்தது. பன்னிரண்டாம் ஆண்டு தொடங்குகிறது. இந்தப் பதினேராண்டுகளாக ஞானசம்பந்தம் பலதுறைகளில் சிறந்து பணியாற்றி வந்ததை நேயர்கள் அறிவார்கள். மக்கள் மனம் தமிழ் எழுத்துலகிலும் எளிமையை - கிளர்ச்சிவேகத்தை - புதுமையை விரும்புகின்ற இக்காலத்தில், பழமையை—சமய சம்பிரதாயங்களை - தூய செந்தமிழ்நடையைத் தாங்கித் தளராது வெளிவருகின்றது என்ருல் - தொன்று தொட்டு வரும் சமய அடிப்படைகளைத் தளரவிடாது பாதுகாத்து வருகிறதென்ருல்—சமயம்போலத் தன்கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் ஒரே கொள்கையான சைவ சித்தாந்தச் செந்நெறியைப் பரப்பி வருகின்றதென்ருல் அதற்குரிய காரணம் கருணைவடிவாகிய அங்கயற்கண்ணி பங்கரான ஆனந்தச் சொக்கலிங்கப்பெருமான் அருள் துணையேயாகும் என்பதில் ஐயமுண்டோ!

அதிலும் இரண்டாண்டுகளாக ஆதீனம் இயற்றிவரும் பிரசார நுணுக்கங்களையும், வெளியீட்டு விளக்கங்களையும் தாங்கிப் பழைய பல நூல் வெளியீடுகளுடன் திகழ்கின்றது என்றால், அந்தப்புகழ் அனைத்தும். இருபத்தைந்தாவது குரு ஞானசம்பந்தப்பெருமானாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களையே சாரும். அவர்களுக்குப் பிரசாரம் ஒருகண் - வெளியீடு ஒருகண், பத்திரிகை ஒருகண் இந்த மூன்று கண்ணாலும் அவர்கள் முதல்வனாக விளங்குகிறார்கள். அவர்கள் அருள்துணையே இதன் வளர்ச்சிக்கு முழுதும் துணைசெய்கிறது. ஏதோ பத்திரிகை நடக்கிறது என்றிராமல் ஒவ்வொரு மாதமும் எல்லாக் கட்டுரைகளையும் திருக்கண்ணோக்கிச் செம்மையாக வெளிவரச் சித்தங்கொள்ளும் சிந்தனை மிகப்பாராட்டுதற்கு உரியது.

வழக்கம்போல மேலும் பல புதிய இனங்களுடன் இப் பத்திரிகை வெளிவரும். ஞானாவரண விளக்கம் தொடர்ந்து வெளிவரும். இது சைவப்பேருலகினுக்கு ஒரு பெருவிருந் தாவது. இது பெருநூலாதலின் தனியே புத்தகமாக வெளி வரச் சிறிது காலமாகும்; ஆதலின் சந்தா நேயர்கள் அப் பகுதியைத் தொகுத்து வைத்துக்கொள்வது நலமாகும்.

இதனை ஊன்றியாராயும் அறிஞர்கள் அவ்வப்போது, திருத்தங்களைத் தெரிவிப்பாராயின் பரமோபகாரமாகக் கருதிப் பதிப்புக்காலத்தில், அவை பயன்படுத்திக் கொள்ளப்பெறும். இங்ஙனமே தொல் - சொல் கல்லாடத்தையும் அன்பர்கள் தொகுத்து வைத்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

சென்ற ஆண்டில் பத்திரிகை வளர்ச்சிக்கு அறிவு நூல் கட்டுரைகளைத் தந்துதவிய தக்கார் பலர்க்கும் நன்றி.

இந்த ஆண்டுத் துவக்கத்திலிருந்து எழுதும் அன்பர்கள் உலகியலோடு ஒட்டித் தம் கருத்துக்களை ஓயாது பரப்ப வேண்டும் என விரும்புகிறோம்.

**வாழ்க ஞானசம்பந்த நல்லிதழ்.**

# *செந்தமிழ்ச் சொக்கர்

தருமபுர ஆதீன வித்துவான், பாலகவி,
வயிநாகரம், **வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்**

ஆண்டவனை மொழியோடு தொடர்புபடுத்திப் பேசுகின்ற நிலை தமிழ்நாட்டிற்கே சிறப்பாக அமைந்ததொன்று. மொழியை இறைவன் தோற்றுவித்தானென்பதும், மொழி யிலக்கணத்தை அவனே வரம்புசெய்து ஆசிரியர்களுக்கு அறி வுறுத்தினனென்பதும் தமிழ் மொழியைப் பற்றி நிற்கின்ற வரலாற்று உண்மைகள்.

"சொக்கர்" என்பது ஒரு தனித் தமிழ்ச் சொல். இச் சொல்லின் பொருளும், "முருகன்" என்ற சொல்லின் பொரு ளும் விரிவால் ஒற்றுமையுடையன என்பதை அறிஞர்கள் நன்கு அறிவார்கள். "சொக்கர்" என்ற சொல்லுக்கு நூல் களின் வாயிலாகவும், அறிஞர்களின் வாயிலாகவும், கேட்கப் பெறுகின்ற பொருள்கள் ஒருபுறம் இருக்க, சாதாரண மக்க ளுடைய பேச்சில், இச்சொல் மிகச் சிறந்த பொருள்கள் தோன்ற வெளிவருவதை அறியலாம்.

இறைவனை இன்பப் பொருளாக எண்ணியதுடன், இன்பப் பொருள்களின் பெயரை இறைவனுக்குச்சூட்டி ஏத்தி மகிழ்வ தில் சைவம் முன்னணியில் நிற்பது. கண்டாரை வசப்படுத்து கின்ற தன்மையுடைய பொருள்கள் உயிர்களால் பெரிதும் விரும்பப் பெறுவன. அவற்றுள் தலைசிறந்த பொருள் கடவுள் என்பதைச் சைவம் வலியுறுத்தும். இதனைத் திருக்கோவை யாருக்கு உரையெழுதிய பேராசிரியர் விளக்குகிறார். எவரை யும் வசப்படுத்தும் இன்ப ஆற்றலையுடைய இறைவனை, அவ் வாற்றலைப் புலப்படுத்துகின்ற "சொக்கர்" என்ற சொல்லால் நம் முன்னோர் அழைத்தனர்.

"சொக்குப்பொடி" என்ற சொல் எல்லாமக்களிடையேயும் வழங்கிவரக் காண்கின்றோம். தொடர்புபெற்றாரை வசப் படுத்துகின்ற பொடி என்பதுதானே இச்சொல்லின் பொருளாக

---

*** தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாட்டில் 23—5—51 திருவிளையாடல் திருநாள் அன்று நிகழ்த்திய விரிவுரையில் சிலகுறிப்புகள்.**

அமைந்திருக்கின்றது? இச்சொற்பொருளின்படி இறைவனைச் சொக்கன் என்று வழங்குவதில் ஏதும் தடையுண்டோ?

இனிச் சொக்கு என்ற சொல்லை மாசற்றது என்னும் பொருளிலும் நாட்டுமக்கள் வழங்குகின்றார்கள். கலப்பற்ற தூய்மையான தங்கத்தைச் 'சொக்கத் தங்கம்' என்று வழங்குவது இதனை வலியுறுத்தும். 'பூசு நீறுபோல் புனிதனாகிய மாசிலாமணியைச் சொக்கனாக நம் முன்னோர் கண்டமைத்த சிறப்பு' நாம் நினைந்து நினைந்து மகிழவேண்டும் நிலையில் இருக்கின்றது.

தேவாரத் திருமுறையில் திருஞானசம்பந்தப் பெருமான் சொக்கன் என்று ஆண்டவனைக் குறிக்கின்றார். அவ்வாறு அவர் குறிக்கும் இடம், மங்கையர்க்கரசியார் சமணர்களின் மிண்டத் தன்மைகண்டு மயங்கி நின்றபொழுது அவரைத் தேற்றிய இடமாகும். கண்டாரை வசப்படுத்தும் கவினும் குறைவிலா நிறைவும் உடைய கோமானாக இறைவனைக் குறிக்க வேண்டிய இடம் இது என்பதை நன்குணர்ந்து "எக்ராம் அமண்கையருக்கு எளியேன் அலேன் திருவாலவாய்ச் சொக்கன் என்னுள் இருக்க' என்று பிள்ளையார் திருவாக்கு வெளி வருகின்றது.

சொக்கப்பெருமான் அழகும் நிறைவும் உடையவராயிருப்பதைத் "தமிழ்ச் சொக்கர்" என்பது குறிக்கின்றது. செந்தமிழிற் பற்று வைத்துச் சங்கமிருந்து தமிழாராய்ந்த பெருமான் ஆதலின் "தமிழ்ச் சொக்கன்" என்று ஏத்தப்பெறுகின்றான் 'அங்கயற்கண் தழுவிய சங்கத் தமிழ்ச் சொக்கர்' என்பது குமரகுருபர அடிகள் திருவாக்கு. 'தமிழ் என்பது இனிமை நீர்மை' என்றபடி, இனிமையுருவாகிய ஏற்றத் தமிழினிடத்தே வைத்த காதல் மிகுதியால் கயிலைவிட்டுக் கன்னி நாடாள வந்த கண்ணுதலைச் "செந்தமிழ்ச் சொக்கர்" என்று வாய் குளிரக்கூறி மகிழ்ந்தனர் நம் முன்னோர். சொக்கர் தமிழினிடத்லே வைத்த ஆராக்காதலை இடைக்காடர் வரலாற்றில் வைத்துப் பரஞ்சோதிமுனிவர் விளக்குகின்றார்.

பாண்டிய மன்னன் பொன்னிதிபோல் அளவிறந்த கல்வியும் மிக்குளான் என்று புகலக் கேட்டுச் சொல்நிறைந்த கவி

தொடுத்துச் சென்றார் இடைக்காடர். அரசியல் அலுவல் எதுவோ ஒன்றில் சிந்தை கொடுத்திருந்த தென்னவன், புலவர் செய்யுளை மதித்துப் போற்றாதவனாயிருந்து விட்டான். கோபங் கொண்டார் புலவர். அரசன் செய்த குற்றத்தை அரசர்க்கு அரசனாகிய ஆண்டவனிடத்துத்தானே முறையிட்டு நியாயம் பெறவேண்டும்? சொக்கநாதப் பெருமானிடம் சொன்னார். ஆண்டவனை முன்னிலைப்படுத்தி அழைப்பதொன்றே பெருமானது தமிழன்பையும், விரைந்து நீதி வழங்க வேண்டுமென்னும் குறிப்பையும் நன்கு புலப்படுத்துகின்றது. 'சந்நிதியில் வீழ்ந்தெழுந்து 'தமிழறியும் பெருமானே! தன்னைச் சார்ந்தோர் நன்னிதியே!'' என்பது பரஞ்சோதியார் திருவாக்கு. சிறந்த அறிவுவடிவமாய்த் திகழும் நுதற்கட்பெருமானைத் ''தமிழறியும் பெருமானே'' என்று அழைக்கின்றார்.

தமிழறிந்த தகைமையுடையவன் பாண்டியன் என்று கேள்வியுற்றுச் செய்யுள் செய்துசென்ற புலவரை மன்னவன் மதியாதிருந்து, தனக்கிருந்த தமிழ்ப்புலமை புலப்படாநிலையில் நடந்துகொண்டான். இதனால் மனம் வருந்திய புலவர், முதலில், ''தமிழறியும் பெருமானே'', என்று அழைத்து, இறைவனுக்கு உள்ள தமிழறிவையும் பற்றையும் நமது நினைவுக்குக் கொண்டுவருகிறார். ''எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்னும் பொய்யா மொழியைச் சிந்தியுங்கள். தமிழறிந்த பெருமான் சொக்கநாதன் என்று கூறுவது பெருமானுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை நன்கு புலப்படுத்துகிறதல்லவா?

தமிழ்ச் சொக்கனாகின்ற தலைவன், இனிமைப் பண்புடையவனாதலின் தன்னைச் சார்ந்தார்க்கு நன்னிதியாக விளங்கி இன்பம் பெருக்குகின்றான். இனிச், செந்தமிழ்ச் சொக்கர் திறத்தைப் பரஞ்சோதியார் பல இடங்களில் கூறியுள்ளார். நக்கீரர், தருமி ஆகியோர்களுடைய வரலாற்றில் இவ்வுண்மை பெரிதும் காணக்கிடக்கின்றது.

# பொய்யில் காட்சியோர் பொருளுரை

## இன்பம் உறுவார் எவர்?

புலவர், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

மண்ணுலகிலும் விண்ணுலகிலும் மற்றெவ்வுலகிலுமுள்ள எவ்வுயிர்க்கும் இன்பமும் துன்பமும் மாறிமாறி எய்துமென்றும், துன்பமே அடைதற்கு நரகு இடம்; இன்பமே அடைதற்குத் துறக்கம் இடம் என்றும் நூல்கள் உணர்த்துகின்றன. இம் மண்ணோர் இன்பமும் துன்பமும் அடைவது அநுபவத்திலறியும் உண்மையாகும். ஆயினும், துன்பக்கலப்பு எள்ளளவும் இன்றி இன்பமே உறுவாரும் இவ்வுலகில் இருத்தலை மறுத்தலரிது. அவர்தன்மையை நன்குணர்ந்தும், அவரை நெருங்கிப் பழகியும், வினவியும், அறிந்து ஒழுகியும்வரின் நாமும் இன்பமே எந்நாளும் எய்துவது எளிது. "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்றருளிய திருநாவுக்கரசு நாயனார், அதற்குக் காரணமும் அவ்விடத்தில் குறித்துள்ளார். உற்றுநோக்குவார் தெற்றென உணர்வர். 'நமச்சிவாயம் சொல்லவல்லோம் நாவால்', 'மீளா ஆளாய்ச் சேவடி யிணையே குறுகினோம்', 'விடையுடையான் ஏன்று கொண்டான்', 'காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக் கல்மனமே நல்மனமாக் கரையப் பெற்றோம்', 'பற்றற் றோம்', 'கடுமையொடு களவற்றோம்', 'பிழையற்றோம்', 'நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்', 'நாவார நம்பனையே பாடப் பெற்றோம்', 'புண்ணியனை நண்ணிய புண்ணியத்து உ(ள்)ளோம்', 'நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன வாசகம் எல்லாம் மறந்தோம்', 'பேயர் பேசுவன பேசுதுமே?' 'தேவாதி தேவன் சிவன்என் சிந்தை சேர்ந்திருந்தான்', 'எண் குணத்து உ(ள்)ளோம்' என்ற இவற்றால் நாம் அறியக்கிடப்பன யாவை? அவை நம் நிகழ்ச்சி ஆகாதவரை நமக்கும் இன்பத் துக்கும் நெருக்கம் உண்டாவது எவ்வாறு?

'இறைவனை நாளும் ஏத்த இடும்பைபோய் இன்பம் ஆமே' என்பதும் அவரது திருவாக்கு. அதனோடு தமது திருவாய் மலரைக்குவித்தருளினரோ? இல்லையே! அக்காலத்திலும்

கடவுளை மறந்து திரிவார் இருந்தனராதலின், அப்பொல்லாத வரைத் தமது நல்லவுள்ளத்தில் நினைந்து, அவர்க்கும் தவர்க்கும் வேறுபாடு கூறு முகத்தால் தவரை வாழ்வார் என்றும், கடவுளை நினையாதவரை மாய்ந்தார் (இருந்தும் இறந்தவரே) என்றும் உணர்த்தும் பகுதியாகிய,

"கற்றவர் பயிலும் நாகைக் காரோணம் கருதி ஏத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்தி லாரே"

என்பதை அருளினர். கழலடிகாணலாம்படியும் சிவகதிவிளையும் படியும் தாம் அடைந்தவண்ணமே தெள்ளத்தெளித்த அப் பெருமானர்,

"படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனிதர் வாழ்க்கை
கெடுவதுஇப் பிறவி சீசீ"

என்று வெறுப்பதில் வியப்பு யாது? அத்தகைய வெறுப்பிற்கே உரியதாய்நின்ற இம்மனிதப்பிறவியும், பொன்னம்பலவன் பொற் புருவக் காட்சி எய்தினல் வேண்டுவதே என்ற இடத்தில் அறிஞர் அகம் அழுந்திநிற்றல்கூடும் அன்றே? அவ்வாறு அழுந்திநிற்கும்போழ்தில்,

"நாயினுங் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி ஆண்டாய்"

என்று தம் சிறுமையும் தம்மை ஆண்ட பரமேச்சுரன் பெருமையும் தம் உள்ளத்தே தோன்றப்பெறுவர். பெற்றதும்,

"அற்பன் என்உள்ளத்து அளவிலா உன்னைத்தந்த
பொன்னம் பலத்தாடீ"

என்றழைத்துப் போற்றுதற்கு இடையீடுண்டோ? தம் செயலனைத்தும் அவன்செயலென்றும், அதனல் தாம் ஒன்றுபெற அவனை வேண்டுதல் மிகை என்றும், இறைவன்செயல் தம்மிடத்தில்லை எனில் அவனை உயிர்க்குயிராயுள்ளான் என்னும்வாயுரை பொய்யுரையாம் என்றும், நன்மையோ தீமையோ தமக்கருள வல்லான் முதல்வனே நாம் அவற்றை ஆக்கிக்கொள்ளவல்லோம் அல்லோம், நம்மினும் சிறியார் எவரும் இரார், இதுவரை நாமே

பெரியம் என்று எண்ணிக்கொண்டிருந்தது நம்சிறுமைக்குறியே யாகும் என்றும் நினைந்து நடந்துவரும் நல்லோரே துன்பக் கலப்பில்லாத இன்பம் உறுவர்.

தம்சிற்றறிவை உணர்ந்தவர் பேரறிஞர். தமதறியாமையை அறிவுடைமையாக்கொண்ட குற்றத்தின்மேலும் சிற்றறிவைப் பேரறிவாக்கொள்ளுங் குற்றம் புரிகின்ற தீயோர் இன்பக் கலப்பில்லாத துன்பமே சுமப்பர்.

“ நாம்பெரியம் என்னுமதை நாடா தடக்குமவர்
தாம்பெரியர் என்றுமறை சாற்றியிடும்—நாம்பெரியர்
என்பார் சிறியர் இவர்அ(ல்)லா திவ்வுலகில்
துன்பார் சுமப்பார்கள் சொல் ”

என்று தருமைக் குருஞானசம்பந்தர் அருளிய சிவபோகசாரத் திருப்பாடலே இங்கு விரித்துணர்வோரும் இன்பம் உறுவர்.

---


## “ ஞானசம்பந்தம் ”

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. *1—8—0.*

**செயலாளர்,**
**“ஞானசம்பந்தம்” காரியாலயம்,**
**தருமபுரம், மாயூரம் P. O.**

# மெய்க்கலை

**திரு. சி. இராமலிங்கம் அவர்கள் M. A.,**

*[மெய்க்கலை விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்]*

அறிவியலிலே (Knowledge) மெய்ப்பொருள் நூல் ஒரு பிரிவன்றோ? மனிதனின் மேன்மை மனம் உடைமையாலன்றோ? மக்களை மாக்களினின்று பிரிப்பது பகுத்தறிவல்லவா? மக்கள் எண்ணத் தொடங்கிப் பல்லாண்டுகள் ஆனபின்னரே எழுத்தில் தமது கருத்துக்களைப் பொறிக்க அறிந்தனர். ஓவியத்தாலும், உறுப்புக்களின் அசைவாலும் ஆதிமனிதன் தனது கருத்துக்களை வெளியிட்டதை மொழிவரலாறு அறிவிக்கின்றது. எண்ணிய எண்ணங்கட்கு எழுத்துருக்கொடுக்கத் தொடங்கிய நாள்முதல் அறிவின் வளர்ச்சி அரும்பத் தொடங்கியது. 'தெரியற்செய்கை' (Science) நூல்களின் விரிவு இடத்தையும், காலத்தையும், இந்நாளில் மனிதன் வெல்ல உதவுகின்றது. உலகம் மிகச்சிறிய இடமாகிவிட்டது. காலையில் சிற்றுண்டியருந்திச் சென்னையி னின்று இலங்கைக்குப் புறப்படுவானுகில் நண்பகல் ஈழநாடு அடைவான். விரைந்து செல்லும் வான ஊர்திகள் நம்நாட்டில் பயன்படுத்தப்பெறுமாயின் ஒருவன் சென்னையிலிருந்துகொண்டு மக்கள்மன்றத்தில் பங்குகொண்டு மாலை காசிவிசுவநாதரைக் கண்டு களித்து வீடுதிரும்பலாம். காலமும் இடமும் வெல்லப் பட்டு வருவதால் பல்வேறு நாட்டுமக்களும் ஒருவரை ஒருவர் அறிந்து பழகிக்கலக்க வாய்ப்புகள் பல உள. திருமூலரின் திருவாக்கு, "ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும்". அதுஉண்மை யாகும் நாள் அணித்தே உளது. ஒருவனேதேவன் என்னும் உண்மையைச் சமய உலகம் நிறுவியுள்ளது. சைவசாத்திரங் களின் முடிபு முழுமுதற்கடவுள் ஒருவரே கண்டீர் என்பதாகும். மக்கள் குலம் ஒன்றென்பதற்குரிய சூழ்நிலை அமைந்து வரு கின்றது. நாடு, மொழி, சமயம், இனம் இவற்ருல் பிரிக்கப் பெற்றிருந்த மக்கள்குலம் இன்று அவை இயற்கையின்பாற் பட்டவை அல்ல என உணருகின்றது. ஆகலின் மக்கள் குலம் பிரிவுபல மறந்து முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கருதி உய்யும் நாள் அணித்தே உளது.

இயற்கைச் சக்திகளின் ஆற்றலை அறிந்து பயன்படுத்தி வருகின்றோம். இயற்கையை வெல்லத் துணைபுரிந்தது மனிதனின் தனிவுடைமையாகிய மனத்தாலன்றோ? உள்ளத்தின் படைப்புக்களே தெரியற்செய்கை (Science) நூல்களின் பிரிவுகளாகும். புறச்சூழலைத் தன்வயப்படுத்த மனிதன் அறிந்துவிட்டான். அகச்சூழலை அறியவோ வெல்லவோ அறிந்தானில்லை. சமயத்தின் பேராலும், அரசியல் பொருளியல்களின் பேராலும் எழுந்த போர்கள் கணக்கிலவாகும். அறிவு தொடங்கிய இந்நாளில் போர்கள் ஒழிந்தனவா? இல்லையே. ஒவ்வொருபோர் தொடங்கும் போதும் அப்போர், போரினை ஒழிக்கவே தோன்றியது எனச் சொல்லுகின்றனர். ஆனால் ஒவ்வொரு போரும் மற்றொரு போருக்கு வித்திட்டே செல்கின்றமையைக் காண்கின்றோம். அமெரிக்கன் உருசியநாட்டைத் தன் பகைமையின் இருப்பிடமாகக் கருதுகின்றான். உருசிய நாட்டினனும் அமெரிக்காவை வெறுக்கின்றான். இவர்தம் பிணக்கு மற்றொரு போரினை விளைக்குமோ எனும் அச்சத்தை எழுப்புகின்றது. பகுத்தறிவற்ற உயிரினங்களில் ஒரு இனம் இன்னொரு இனத்தை அழிக்கக் காண்கின்றோம். இது உயிர்நூல் (Biology) களில் காணும் உண்மை. ஆனால் மனிதனே தன் இனத்தையே தான் அழிக்கின்றான். இது மிக மிகக் கொடுமையல்லவா? அறிஞரொருவர் மனிதனின் வளர்ச்சி என்ற நூலினை மிக விரிவாகப் பலதுறை முன்னேற்றங்களைத் தொகுத்தும், வகுத்தும் எழுதினார். இந்நூலினைப் பற்றிக் காலஞ்சென்ற நாடகக்கவியும் நுண்ணறிவு மிக்கவருமான பெர்னாட்ஷா (Bernard Shaw) தமது கருத்தை வெளியிடுகின்றபொழுது சுருக்கமாக மனிதனின் முன்னேற்றத்தை விளக்கினார். முற்காலத்திலும் போர்கள் நடந்தன; இக்காலத்திலும் போர்கள் நடக்கின்றன. முற்காலப் போரில் தனிமனிதன் தனிமனிதனோடு போர்செய்தான். அல்லது ஒரு இனம் இன்னொரு இனத்தோடு போர் செய்தது. அப்போரில் ஈடுபட்டவர்கள் மட்டுமே தாக்கப்பெற்றனர். இன்றைய மனிதன் நேற்றைய மனிதனைவிடப் பல வகையில் முன்னேறி விட்டான். இன்று நடக்கும் போரெல்லாம் உடல்வன்மையைவிட அறிவு வன்மையினால்தான் நடக்கின்றன. இன்றைய போரில், போரில் ஈடுபட்டவர்கள் மட்டுமன்றிப் போரில் ஈடுபடாதவர்களும் எந்நாட்டோடும் சேர்ந்து போரிடாது நடுநிலை வகிப்பவர்களும் கூடப் போரின் அச்சப்பிடிக்கு ஆளாகின்றனர். இன்றையபோர் புல்பூண்டுகூட முளைக்கமுடியாத அணுக்குண்டுப்

போராக இருக்கின்றது. இதுதானு மனித அறிவின் முன்னேற்றம் என அவர் கேட்கின்ருர். இன்றைய போர் பகைவனை மட்டும் எதிர்த்துத் தொடரப்பெறுவதல்ல. இப்போரால் ஒரு நாட்டின் ஏழை எளியவர், பசு, நோயாளி, புல், பூண்டு எல்லாவற்றின்மீதும் அன்பு விரிவதற்குப் பதிலாகப் பகைமை விரிகின்றது. பண்பாடு என்பது வேறு. நாகரிகம் என்பது வேறு. பண்பாட்டின் வளர்ச்சிக்கு மெய்ப்பொருள் நூல் அறிஞர்கள் பலர் வேண்டும். அப்பண்பாடு இலர் பலராதலால் பண்பாட்டின் வளர்ச்சி பெருகவில்லை. அறிவியலிலே (Among Branches of knowledge) தலைமை வகித்துக் கிரேக்கநாட்டில் அரசு செலுத்தியது மெய்ப்பொருளியல். இன்று தெரியற் செய்கையின் நூல்களாகக் கொள்ளப்படும் இரசாயனம், பௌதிகம் முதலிய பிரிவுகள் பிரியத்தொடங்கின. இன்று மெய்ப்பொருளியல் ஒரு தனித் தொகுதியாக இருந்து வருகின்றது. புறப்பொருள்களைக் கண்டு தெளிந்து அதன் இயல்புகளை அறியத் தலைப்படும்போது அது விஞ்ஞானத்தின் விரிவாக அமைகின்றது. மனிதன் தனது உள்ளத்தின் இயல்புகளையும், உலகத்தை ஒருசேரநோக்கி அதன் உண்மைகளையும் உணரத் தலைப்படும்போது அது மெய்ப்பொருளாக அமைகிறது.

'Philosophy' என்ற ஆங்கிலச் சொற்கு 'அறிவுக்காதல்' (Love of wisdom) என்று ஒருவாறு பொருள் கொள்ளலாம். ஆங்கிலச் சொல்லாகிய இது (Philosophy) விரிந்த பொருள் பயப்பதாய் உளது. ஆனல் இச்சொல் விரிந்த்பொருள் பயக்கும் வகையில் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. தமிழில் 'Philosophy' என்ற சொல் 'தத்துவம்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழி பெயர்ப்பு தக்கதன்று. சாங்கியத்தில் இருபத்தைந்து தத்துவம் பேசப்படுகின்றது. சைவசித்தாந்தம் அதை முப்பத்தாருகப் பேசுகின்றது. இன்னும் சிலர் அதனைத் தொண்ணூற்ருருகக் கொள்கின்றனர். இத்தத்துவங்களின் ஆய்வோ விரிவோ விளக்கமோ மெய்ப்பொருளியல் அன்று.

மெய்ப்பொருளியல் ஒரு தனிக்குழு. உள நூல் (மானத சாத்திரம்), நீதிநூல், அளவைநூல் அல்லது தருக்கம், பௌதிகம், இறந்த பொருள்நிலைகள், (Meta physics) மதிப்

பியல் (axibology) இன்னோரன்ன தொடர்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது மெய்ப்பொருளியல். கீழைநாட்டு மெய்ப் பொருளியல் கொள்கைகளில் சாக்கியத்தையும், சைவ சித்தாந் தத்தையும் கருதும் ஞான்று தத்துவம் என்ற சொல்லினைத் தனித்த ஒருபொருள் பயப்பதாகக்கொண்டு கருதுகின்றோம். சாக்கியம் உலகத்தை (universe) இருபொருள்களில் அடக்கிப் பிரக்கிருதி—புருடன் அதன் விரிவாக இருபத்தைந்து தத்துவங் களில் விளக்கிக் காட்டுகிறார்கள். ஆகலின் 'Philosophy' என்ற சொற்குத் தத்துவம் என்ற சொல் ஏற்புடைத்தன்று. மெய்ப் பொருள்நூல் என்ற தொடர் ஏனைய நூல்களெல்லாம் பொய்ப் பொருளினை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது என்ற கருத்திலன்று. உண்மைப்பொருள் ஒன்றா? இரண்டா? பலவா? என்ற கேள்வி அடிப்படையில் மூவகைக் கேள்விக்கு இடந் தந்தது. மெய்ப்பொருள் (Reality) ஒன்று என்பார் 'Monists' எனவும், கீழைநாட்டு மொழியில் அத்துவைதிகள் எனவும் வழங்கப்பெறுவர். மெய்ப்பொருள் இருகூறுகளால் ஆயது என்பார் துவைதிகள் எனப்படுவர். உலகத்தில் யாண்டும் பன்மை காணப்படுதலால் Pluralists என்பார்கள். உலகம் எத்தன்மையது? எப்பொருளால் ஆயது? ஏன் உளது? குறிக் கோள் ஏதேனும் உண்டா? என்பனபோன்ற தலையாய கேள்வி களுக்கு விடையிறுக்க முயன்ற முயற்சிகளின் விளைவாக விளைந்த அறிவுத் தொகுதிதான் மெய்ப்பொருளியலாக இன்று காட்சியளிக்கின்றது. முதன்முதலில் அல்லது தொடக்கத்தில் இக்கேள்விகள் எங்ஙனம் பிறந்தன என்பது உன்னற்பாலது. மெய்ப்பொருளியலின் உயிர்நாடி சிந்தனையாகும். உன்னுதல் ஆழங்கினைத்தல் அல்லது சிந்தனை இன்றேல் மெய்ப்பொருள் நூல் இலது.

சிந்தனை இன்றேல் அறிவியல் வளர்ச்சியுறாது. மெய்ப் பொருளறிஞன் அல்லது தத்துவ ஞானியின் தனிவுடைமை யன்று சிந்தனை. பௌதிக வல்லுநர்களின் வரலாறும், பௌதிக உண்மைகளும் நமக்குச் சிந்தனையின் சிறப்பை உணர்த்துவதோ டல்லாது நம்மை நாமறியவும், நம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தை அறியவும், உலகத்தோடு நாம் கொண்டுள்ள தொடர்பை அறியவும், வாழ்வின் பயன் அல்லது குறிக்கோள் முதலிய இன்றியமையாத கேள்விகளுக்கு விடையிறுக்கப் பயன்படுவது தெளிவு.

'Philosophy' என்ற ஆங்கிலச்சொல் விரிந்த பொருளுடையது. "Philosophy" என்ற சொல்லுக்குக் கொள்கை என்று பொருள்கூறலாம். அந்தமுறையில் அந்தப் பொருள் கொண்டு நோக்கின் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு கொள்கை (Attitude) உண்டு என்பதை மறுக்கமுடியாது. சிந்தனைச் செல்வர்கள் எத்துணைபேர் உளரோ அத்துணைக் கொள்கைகள் உண்டென்பது தேற்றம், கொள்கை என்றால் எதைப்பற்றிய கொள்கை என்ற வினா எழுகின்றது. மேலே குறித்துள்ள கேள்விகளைப்பற்றிய கருத்தின் தொகுதியே கொள்கையாகும். தனித்த ஒன்றுபற்றிய கொள்கை 'Philosophy' ஆகாது. கிரேக்கநாட்டில் 'சொக்கூராத்தர்' (Socrutes) முதல் இன்னாள் நம்மிடை வாழ்ந்து மறைந்த காந்தியடிகள் ஈருகப் பற்பல கொள்கைகள் (Philosophies) உலகத்திடை உலவக் காண்கின்றோம்.

மெய்ப்பொருள் நூல் அறிவியலிலே தலையாய இடம் வகிப்பதாகக் கருதுவது ஒன்று. இது இன்னாள்கருத்து. வாழ்க்கையைப் பற்றிய கொள்கை அல்லது கருத்து என்று சமயத்தைக் கொள்ளின் Philosophy என்பது வாழ்வே ஆகிறது. (Religion is attitude towards life while philosophy is a way of life) வாழ்க்கையைப்பற்றிய கருத்துக்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் இருப்பது இயல்பு. கிரேக்கநாட்டில் பலவிதக் கருத்துக்கள் உலவின. இன்னல் அடுத்தடுத்து வந்து துன்புறுத்துவதால் வாழ்வு வெறுக்கத்தக்கது என்று கொள்வோர் உளர். இன்றிருப்பார் நாளை இலர் என்னும் பெருமையை இந்நானிலம் உடைத்தாதலின் வாழ்க்கையை நாம் வாழ்ந்துவிடல் வேண்டும் என்ற எண்ணத்தோடு எக்கட்டுப்பாடும் [இன்றி வாழ்வோரும் உளர். பசிதீர உணவுகொள்வதும், உடல் ஓய்வுகொள்ள உறங்குவதும், உயிர்ப்பதும். உலாவுவதும் உலகவாய்பாடு எனக்கொள்வர் ஒருசாரார்.

உலகு ஒரு பெரும்பள்ளி (பல்கலைக்கழகம்). அவரவர் வினைக்கேற்பச் சுற்றுப்புறச் சூழல் அமைய - அகச்சூழலும், புறச்சூழலும் அமைய, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பெறலரும் மனிதப் பிறவியைப் பயன்படுத்தி வாழ்வின் குறிக்கோளை அடைதல் பிறவியின் பயன். இக்கொள்கை கீழை நாட்டுக் கொள்கை என்பது தெளிவு. உலகம் ஒரு நாடகமேடை.

உலகமக்கள் அனைவரும் நாடகத்தில் பங்குகொள்ளாமல் இருக்க முடியாது என்பது ஒருதலை. அவரவர் நடிக்கவேண்டிய பாகத்தை முன்வினை முடிவுசெய்யச் சிறக்க நடிப்பதோ பிறர் தூற்றுத லுக்கு உள்ளாவதோ இவன் தனிப் பொறுப்பு.

வாழ்வின் இலட்சியத்தைக் கீழைநாடு முடிபுறக் கண்டபின் மேலைநாட்டார் வாழ்வின் பயனைப் - பிறவியின் பேற்றினை உணர முற்படுகின்றனர்: ஆசியச்சுடராக விளங்கும் இந்தியா மெய்ப்பொருளியலினை நன்கு வளர்க்கும் ஆற்றலோடு விளங்கு கிறது. மெய்ப்பொருளியல் நாடு மொழி முதலியவற்றால் பிரிக் கப்பட ஒண்ணாததாயினும் மேலைநாடுகளில் விஞ்ஞானமும், மெய்ப்பொருள் நூலும் ஒன்றிப் பின்னிப் பிணைந்து வளரக் காண்கிறோம். கீழைநாடுகளில் மெய்ப்பொருளியல் சமயத்தோடு ஒன்றி வளரக் காண்கிறோம். முன்னாளில் தெரியற் செய்கை நூல்களில் சில பிரிந்து மெய்ப்பொருளியலின் தொடர்பின்றிச் சின்னாள் வளரினும் இன்றைய இரசாயன வளர்ச்சி பெரிதும் மெய்ப்பொருள்நூல் வல்லுநர் அல்லது சிந்தனைச் செல்வர் ஆகியோரால் வளர்க்கப்பெறுவது கண்கூடு. அறிவியலின் ஒவ்வொரு துறையிலும் மெய்ப்பொருளியலின் ஆட்சி அல்லது அதன் வளர்ப்பு தெரிகிறது.

கூர்தலறம் அல்லது உள்ளது சிறத்தல் (Evolution) தானே இயங்கும் ஒரு சக்தியா? (Is it a blind mechanical process) பிரஞ்சு நாட்டு அரசர் 'Bergson' என்பவர், 'Creative evolution' என்று பேசும் இடங்களில் எல்லாம் கூர்தலறம் தானே இயங்குவது அன்று; அதனை இயக்கும் பிறிதோர் சக்தி ஒன்றுண்டு; அறிவுள்ள ஒன்றுதான் அதனை இயக்கவல்லது என்ற முடிவுகொண்டு அமைகின்றார்.

'இடத்தையும், காலத்தையும் அளக்குமுன்னர் இடம் என்பது யாது? காலம் என்பது யாது? (Space and time) என்ற வினாக்களுக்கு விடைகண்டு, பின்னர் நாம் இடத்தையும், காலத்தையும் அளக்கலாம்' என்பது பௌதிக அறிஞரின் கூற்று. அவர் கண்ட முடிபு மிக நுண்ணியதாயினும் (The theory of relativity) உலகில் ஏறத்தாழப் பதின்மர்தான் அவரை அறிந்தனராயினும், சுருங்கக்கூறின் தனியே காலம் என்பதொன்றில்லை; இடம் என்ற ஒன்றும் இல்லை; (Obsolute-

ness of space and time) காலம் என்பது தனியாயும் இடம் என்பது தனியாயும் இல்லை; இரண்டும் ஒன்றிய ஒன்றை அவர் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார். (Spacio temporal concept) இத்தகைய விடையளிப்பதன்வாயிலாக விளைந்த முடிபுகள் Philosophy of physics என்ற தனிப்பிரிவை உண்டாக்கியது. மேலே கூர்தலறத்தைப்பற்றிக் கண்டதும் 'Philosophy of Biology' என்ற துறையினை உண்டாக்க காண்கின்றோம். உள நூலறிஞர்கள் உள்ளம், மனம், சித்தம் என்ற ஒரு பொருளுடைய பலசொற்கள் சுட்டும் பொருளினையோ சக்தியினையோ ஆராயாது உள்ள நிகழ்ச்சிகளை (Mental or physical process) ஆராய்ந்து வந்தனர். இந்நாள் மெய்ப்பொருளறிஞர் உள்ளம் அல்லது மனத்தினை ஆய்ந்து அறிந்தபின்னரே நாம் உள்ளத்தின் விரிவை—நிகழ்ச்சிகளை அறிதல் வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

இது முறையே உளநூலும், மெய்ப்பொருள் நூலும் (Philosophy of mind) என்ற துறையினைத் தோற்றுவிக்கின்றது. இவ்வகையிலேயே சமய உண்மைகளையும் மெய்ப்பொருள் நூல்காணும் கருத்துக்கொண்டு ஆய்ந்து சில உண்மைகளைக் கண்டுள்ளனர். மெய்ப்பொருள் நூல் கற்கும் மாணவன் கற்பனை உலகில் வாழ்பவன் என்று எள்ளி நகையாடின காலம் போய்விட்டது. ஐன்ஸ்டைன், கார்ல்மார்க்ஸ், பர்ட்ராண்ட், சர். ராதாகிருஷ்ணன் போன்றவர்கள் சிந்தனைச் செல்வர்களாக விளங்குகின்ற காட்சி ஒன்றே மெய்ப்பொருள் நூலினைப்பற்றித் தவறாகக் கொண்ட கருத்துக்களை யெல்லாம் தகர்த்தெறியச் சாலும். மேல் நாட்டில் விஞ்ஞானமும், மெய்ப்பொருள் நூலும் சேர்ந்து ஒன்றுக்கொன்று உதவிப் பற்பல புதிய உண்மைகளைக் கண்டுவரக் காண்கின்றோம். அத்தகைய முயற்சிதான் 'Philosophy of Science' என்றொரு தனித்துறையினுக்கு அடிகோலியது. கீழைநாட்டில் புதிதாகக் காணவேண்டுவது ஒன்றுமின்று. எல்லாம் வேத, உபநிடத, பிரம்ம சூத்திரங்களிலேயே அடங்கி உளது. இங்கு சமயமும், மெய்ப்பொருளியலும் வேறுபாடு உணர்த்தாவகையில் கலந்து நிற்பதால்—நின்றதால் மெய்ப்பொருள் நூலின் வளர்ச்சி இங்கு இல்லை. உள்பொருள் (Reality) ஆராய்ச்சியில் திளைத்த மூதறிஞர் முதற்பொருள் அல்லது பரம்பொருள் மாற்றம் இல்லாததொன்று என்று கண்டனர். அன்றுபோல் என்றும்

உள்ளது என்று வேறு சொற்களில் கூறினர். இவர்கள் நாடிச் சென்ற அந்தப் பரம்பொருள் இயல்பே இவர்தம் மெய்ப்பொருளியலையும் சார்ந்து நிற்கின்றது. கீழ்நாட்டு உண்மைகள் மாற்றம் இல்லாதவை. பரம்பொருளும் மாற்றம் இல்லாத ஒன்று. ஆனால் இங்கு ஒரு கேள்வி எழலாம். மாற்றம் காணுகின்ற ஒன்று உண்மையாகுமா? பற்பல மாறுதல்களிடையே மாருத ஒன்றைத் தானே பௌத்தம் தேடிச்சென்றது; மாறுதல் (Change) தான் உண்மை; மாறுதல் இல்லாத ஒன்றில்லை என்பது மேலைநாட்டுக் கருத்து.

கோட்பாடு, கொள்கை, முடிந்த முடிபு, சித்தாந்தம் என்ற சொற்கள் பயக்கும் பொருளில் 'Philosophy' என்ற ஆங்கிலச் சொல் வழங்கப்பெற்று வருகின்றது. இத்தாலி அல்லது ஜெர்மனி கண்ட மெய்ப்பொருள் என்று கூறும்போது ஜெர்மானியர் சித்தாந்தம் யாது? இத்தாலியர்கொண்ட கோட்பாடென்ன? என்றுதான் பொருள். தனிமனிதனுக்கும் வாழ்க்கையைப்பற்றிய குறிக்கோள் உண்டு. அதுபோலவே ஒருநாட்டுக்கும் ஒரு குறிக்கோள் உண்டு பலர் ஒப்பமுடிந்த முடிபினைத்தான் நாட்டின் முடிபாகக் கொள்ளவேண்டி உள்ளது. எத்துணை நாடுகள் உளவோ அத்துணைச் சித்தாந்தங்கள் உள, இதுகாறும் வெளிப்போந்துள்ள சித்தாந்தங்கள் அனைத்தினையும் கருத்தில்கொண்டு இவற்றிடையே ஊடுருவிச்செல்லும் கருத்து யாது? எல்லா நாட்டினரும் ஒப்பமுடிந்த உண்மை என்ன? என்பது உலக சித்தாந்தம் ஆகும்.

பல நூற்றுண்டுகளாகப் பலர்கொண்ட கருத்துக்களையும், கண்ட முடிபுகளையும் சுருங்க ஒரு கட்டுரையில் விளக்குவது அரிதாம். மேலே கூறப்பட்ட ஒவ்வொரு உண்மையும் விரிவஞ்சி விரிக்காது விடப்பட்டன. மெய்ப்பொருளியலின் உயிர்நாடி யாது என்பதனை ஜெர்மானியர் கூறுமுகத்தான் கூறப்புகின் உலகத்தைப்பற்றிய—வாழ்க்கையைப்பற்றிய கொள்கை, கோட்பாடு அல்லது சித்தாந்தம் என்பதுதான். அவர் வாக்கினுல் கூறவேண்டுமானல்,

Philosophy gives us a Weltan chawng or a blensanchawng

---

# *வான்மீகம்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்கசாஸ்திரிகள், M. A., B. L.,
[தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.]

**यावत् स्थास्यन्ति गिरयः सरितश्च महीतले ।
तावद्रामायणकथा लोकेषु प्रचरिष्यति ॥**

ஸ்ரீமத் ராமாயணம் ஒரு சாச்வதமான கவிதை நூல் என்பது தாத்பரியம். எதுவரையில் ஹிமயம் முதலிய குலபர்வதங்கள் இருக்கப்போகின்றனவோ? எதுவரையில் கங்கை முதலிய புண்ணிய நதிகள் பூதலத்தில் பிரவகிக்கின்றனவோ, அதுவரையில் ஸ்ரீமத்ராமாயணம் இப்புவியின்கண் உள்ள சகலவிதமான தேசங்களிலும் பிரசாரமுள்ளதாக இருக்கும். இன்றுவரை இது சாச்வதக் கவிதை என்ற உண்மையை நாம் அறிவோம். ஸ்ரீராம விருத்தாந்தம் துவாபரயுகத்திற்கு முன் த்ரேதாயுகத்தில் நடந்தது. ஸ்ரீமத் வால்மீகி ஸ்ரீராமபிரானின் சம காலத்தில் வாழ்ந்தவர். **को न्वस्मिन् साम्प्रतं लोके गुणवान् कश्च वीर्यवान्** என்று ஸ்ரீவால்மீகி நாரதரைப் பிரச்னம் செய்கிறார். "இப்போது இந்த உலகத்தில் யார் குணவான்? யார் பராக்கிரமசாலி?" என்று ஸ்ரீராமபிரான் ஸீதாதேவியுடனும் லக்ஷ்மணனுடனும் சித்ர கூடத்தில் வசிக்கும்பொருட்டுச் செல்லும்போது அங்கு வால்மீகியின் ஆச்ரமத்தில் ஆதித்யம் பெற்றுக்கொண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் உத்தரகாண்டத்தில் ஸீதா பரித்யாகத்திற்குப்பின் ஸ்ரீ வால்மீகி ஸீதையைத் தன் ஆச்ரமத்தில் வைத்துக் காப்பாற்றியதும், அங்கே அவள் இரு குழந்தைகளைப் பெற்றதும் வருணிக்கப்படுகின்றன. ஸ்ரீ வால்மீகி ஸீதாதேவியின் புதல்வர்களுக்குச் குசன் என்றும் லவன் என்றும் பெயர்சூட்டி உபநயனம் செய்வித்து அத்யயனமும் செய்வித்துப் பின் தான் இயற்றிய ராமாயணத்தை மனப்

---

* தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் 24—5—51 ராமாயணத் திருநாளில் நிகழ்த்திய பிரசங்கத்தின் சில குறிப்புக்கள்.

பாடம் செய்து ஸபைகளில் பாடும்படி தயாரித்ததான கதையும் அங்கே காணப்படுகிறது. ஸ்ரீராமபிரானின் அச்வமேத யாகத்தில் ஸீதாதேவியையும் குசலவர்களையும் ஸ்ரீராமனிடம் ஒப்புவிக்க வால்மீகி பிரயத்தனப்பட்டார் என்பதும் தெரிகிறது. இவ்விதம் ஸ்ரீராமனின் சமகாலத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தை இயற்றிய வால்மீகி பலலக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன்னிருந்தவர் என்பது நம் புராதனச்செய்தி. அவ்வளவு லக்ஷ வருஷங்களாகவும் ஸ்ரீமத் ராமாயணம் பூலோகத்தில் பிரசாரத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு இன்று அதற்கிருக்கும் பிரசாரமும் பெருமையுமே அத்தாக்ஷி. இவ்விதமே வருங்காலத்திலும் ஸ்ரீமத் ராமாயணம் சாச்வதமாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை. பர்வதங்களும் மகாநதிகளும் மறையும்காலம் பிரளயகாலந்தான். அதுவரை ஸ்ரீமத் ராமாயணத்தின் பிரசாரம் குன்றாது என்பது தாத்பரியம்.

மேலும் தர்மத்தை விளக்கும் ஸ்ரீமத் இராமாயணம் உலகில் நிலைபெற்றிருக்கும்வரை உலகத்திற்கு அழிவில்லை என்பதும் இதனால் அறியத்தக்கது. **धारणात् धर्मः** உலகத்தை அழியாமல் தாங்குவது தர்மம் எனப்படும். இதை வேதங்கள் உபதேசிக்கின்றன. அவைகளினின்றும் ஸ்மிருதிகளினின்றும் தர்மத்தை அறிந்துகொள்ள முடியாதவர்களுக்கு ஸ்ரீமத் ராமாயணம் எளிதானமுறையிலும் இனிப்பாயும் தர்மங்களைப் பிரசாரம் செய்கிறபடியால் சிரத்தை, தபஸ் முதலியன குறைந்த இக் கலிகாலத்தில் ஸ்ரீமத் ராமாயணம் ஒன்றுவது பிரசாரத்திலிருந்தால் தர்மம் அழியாது என்பது அபிப்பிராயம்.

ஸ்ரீமத் ராமாயணத்திற்கு வேதாந்த பரமாயும் சரணாகதி பரமாயும் மஹான்கள் வியாக்கியானங்கள் செய்திருக்கிறார்கள். ஆனால் தர்மபரமான வியாக்கியானமே யாருக்கும் எளிதில் பயன்படக்கூடியது. ஒரு கவி இதையே எடுத்துக் காட்டுகிறார். **यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायताम् । अपन्थानं तु गच्छन्तं सोदरोऽपि विमुञ्चति ॥** "உலகத்தில் நியாயம்

அநியாயம் என்று இரண்டு உண்டு. நியாயவழியில் செல்பவனுக்கு, பக்ஷிகளும் மிருகங்களும்கூட ஸஹாயம் செய்கின்றன. அக்கிரமக்காரனை உடன்பிறந்தவன்கூட விலக்கிவிடுகிறான். என்பது ஸ்ரீமத் ராமாயணத்தினால் நாம் முக்கியமாய் அறிந்துகொள்ளத்தக்க நல்லுபதேசம்.''

மற்றொன்று ஸீதாதேவியின் காருண்யம். எந்த அரக்கர்களால் அவள் துன்புற்றனளோ அவ்வரக்கர்களிடம் தயவுற்று அவள் தண்டகாரண்ய பிரவேச சமயத்தில் ஸ்ரீராமனுடன் வாதாடுகிறாள். மனுஷ்யன் தவிர்க்கவேண்டிய மூன்று மஹாபாபங்களில் **विना वैरं च रौद्रता** என்பது மிகவும் பெரிது என்று எடுத்துக்காட்டி ஸ்ரீராமன் மஹர்ஷிகளுக்குச் செய்த ராக்ஷஸவதப் பிரதிக்ஞையை அவள் ஆக்ஷேபிக்கிறாள். பின்னர் அசோகவனத்தில் ஸீதாதேவிக்கு ராவணன் வதமான நற்செய்தியைக் கொண்டுவந்த ஹனுமான் அதுகாறும் அவளைப் பயமுறுத்தி ஹிம்சித்த ராக்ஷஸிகளைத் தண்டனைக்கு உள்ளாக்க அனுமதி வேண்டியபோது தேவியார் **कार्यं करुणमार्येण । न कश्चिन्नापराध्यति ॥** என்று சமாதானம் கூறுகிறாள். ''அரக்கிகள் ராவணராஜ்யத்தில் ஹிம்ஸித்தார்களே ஒழிய விபீஷண ராஜ்யத்தில் நல்லது செய்வார்கள்; மேலும் குற்றம் செய்யாதவர்கள் மனிதவர்க்கத்தில் எங்கும் இல்லை. பெருந்தன்மையுடையவர் எப்போதும் கருணைகாட்ட வேண்டும்.''

இத்தகைய அநாதி தர்ம தத்துவங்களை எடுத்துக் காட்டும் ஸ்ரீமத் ராமாயணம் ஊருக்குஊர் வீட்டிற்குவீடு பிரஸங்கிக்கப்பட்டுப் பிரசாரமடையுமேயானால் ஜனங்கள் நல்வழியில் பிரவர்த்திப்பார்கள். சாந்தியும் க்ஷேமமும் ஸுபிக்ஷமும் நிலவும்.

# இயற்கை வருணனை

புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

இயற்கை என்பது மக்களால் செய்யப்படாதனவாய்ப் படைப்பில் அமைந்தவற்றைக் குறிப்பது. செயற்கையின் வேறுவது. தத்துவநூலோர் பொருள்களின் நிலைநிலையாமைகளை (நித்தியா நித்தியங்களை)ப் பகுத்துணர்ந்து, இயற்கை செயற்கை எனக் கூறுங்கருத்தில், இங்கு இயற்கை என்று கொள்ளவில்லை' என்றும் ஒரு தன்மையதாகி அவிகாரியாயிருப்பதை இயற்கை என்றும், மாறுந்தன்மையவாய் விகாரியாயனவற்றைச் செயற்கை என்றும் அவர் அறிவித்தனர்.

இயற்கை வருணனை என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்னும் ஐம்பெரும் பூதங்களையும் அவற்றின்கண் கால வேறுபாட்டால் நிகழும் பல்வேறு நிலைகளையும் உள்ளவாறே புனைந்தோ அழகுஞ் சுவையும்படச் சொற்பொருள் இன்பம் தோன்ற வருணித்தலாகும்.

இயற்கை வருணனை செய்தலில் இன்றைய புலவரினும் பண்டைய நல்லிசைப்புலவர் போற்றத்தக்க சிர்த்தியர். இடைக் காலத்துப் புலவருள் திருத்தக்கதேவர் கம்பர் எனச் சிலரே முன்னிற்பர். புறக்காட்சியைப் பாடுவோரினும் அகத்தோற் றத்தைப் பாடுவோரே ஆற்றல் மிக்கவர். அதனொடு எண்ணி யதை எண்ணியவாறே புறத்தார்க்கு நன்கு புலப்படப் பாடுதல் சாலச்சிறந்தது. பாவலராயிருக்கலாம்; நாவலருமாகி விளங்குதல் அரிது. பாவன்மையும் நாவன்மையும் படைத்தவராயிருக்கலாம்; பொருட்செறிவமைந்த பாக்களைப் பாடும் நாக்கினராதலரிது.

பாட்டிற்குள்ள ஆற்றல் பெரிது. மந்திரத்தின் ஆற்றல்' அதன் ஓசை பிசகாதவழியே தன்பயனைத் தோற்றும். அவ்வாறே தான் பாட்டும் ஆகும். பாட்டால், மழைபெய்வித்தல் முதலிய அருஞ்செயல்கள் நிகழ்த்தினர் என முன்னோர் வரலாறுகளுட் காணப்படுவது ஒருபொழுதும் பொய்யாகாது. அப்பாட்டும்

அதன் ஓசையும் மட்டும் அவ்வருஞ்செயலைச் செய்வனவாக எண்ணுதல் வேண்டா. அப்பாட்டைப் பாடியவரது ஆற்றல் ஓசையிலும் பாட்டிலும் இயைந்துதான் அதைச்செய்கின்றது. இதை நம்பாதவர்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப"

என்னும் தொல்காப்பியர் உரையையும் தொலைவில் எறிவர். அவரொடு தமிழர் சிறிதும் உறவுகொள்ளற்கிடனில்லை.

கலித்தொகை (பா. 99.) கூறியவாறு, நீதியால் உலகத்தில் பிழையாமல் மழைவருதல் உண்டு என்பதும், (16) கற்பு மேகத்திற்கு உரிய ஞாயிற்றை இரந்து மழைபெய்தற்குத் துணையென்பதும், நூற்கேள்வியந்தணர் வேள்விப்புகையும் மழைபெய்விக்கும் பெருஞ்சிறப்புடையதென்பதும் உண்மையென நம்பி, தக்கதொருவழியில் தேர்வு நிகழ்த்திக் காணின், பொய்யிலா நிற்பிற் பிறக்கும் நீதியும் மாதரார் அன்பில் நிலைக்கும் அறமும் அன்னவர் கற்பில் வருங் காலமழையும் கம்பர் பொய்யாமொழியைப்போற்றும் மெய்யாவிளங்குதல் திண்ணம்.

இவ்வுண்மையை இங்குக் குறிப்பதன் நோக்கம் என்ன? பாவலன் பொய்யிலாதவனாகிப் பாடித், தன் ஆற்றலில் உலகை நன்னிலையில் வைக்கத் தவறிய குற்றம் பெருகியதும் இந்நாளில் மழையின்மைக்குரிய காரணம் பலவற்றுள் ஒன்று என்பதே. அறம் பொருள் இன்பங்களை உணர்த்தும் பாக்கள் பொய்ப் புலவன் வாயைத் தாயாக்கொண்டமாக்களாயின், அம்மாக்களால் உலகிற்கு எப்பயன் விளையும்?

பண்டைய நல்லிசைப் புலவர் செய்யுட்கள் பட்டாங்குணர்த்தும் இயற்கைநலம் குறையாமலிருந்தன.

மலையில், சேம்பினிலைகள் அசைகின்றன. காரணம் வாடைக்காற்று வீசுவது. அதைக்கண்ட புலவர்க்கு அச்சேம்பினிலைத் தோற்றம் யானைச் செவிகளை நினைப்பூட்டியது. அந்நினைப்பே பாட்டுவடிவில் அமைந்தது. எவ்வாறு?

" சிலம்பிற் சேம்பின் அலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி யச்சிரம் "

என்று கண்டதொன்றும் விண்டதொன்றும் ஆகாதவாறு. 'பாசடை', 'நெடுந்தாளகலிலை' என்ற புலவர் மற்றையோரினும், இப்புலவர் 'சிலம்பிற் சேம்பினிலை', 'பெருங்களிற்றுச் செவி' போன்றதென்றநயம் சிறந்தது.

கவலை என்ற கிழங்கு பேர்த்தெடுத்த இடமான சிறு குழியின் அகன்றவாயில், கொன்றைப் பூக்கள் விழுந்து பரவியிருக்கின்றன. அக்காட்சியைப் பெற்றவுடன், புலவன் பண்டு செல்வர் வீட்டுப் பொற்பெட்டியைத் திறந்துவைத்திருக்கக் கண்ட (தொல்) காட்சி நினைவிற்பட்டது. பட்டாங்கு,

" கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவு "

என்று பாட்டு வெளிவந்தது. இது தூயசெந்தமிழ்ச் சொல்லுருவில் அமைந்து பழந்தமிழார்வம் மிக்கவர்க்குப் புதுவிருந்தாய் நிற்கின்றது.

எவர்க்கும் தம் இனத்தைப்பற்றிய செய்தியை விரும்பிக் கேட்பது இயல்பு அது தனியின்பம் உண்டாக்குவதே. ஆயினும், இனமல்லாத பொருளைப்பற்றிய செய்தி துன்பமாக்கும் என்று முடிவுசெய்தல் பொருந்தாது.

ஒரு மலைச்சாரலில், கடுவன் இறந்தது. மந்தி தன் துணையை இழந்த பெருந்துன்பத்தைப் போக்கிக்கொள்ளவும் தாங்கி வாழவும் முடியாமையால், தானும் தன் துணைக்கு நேர்ந்த முடிவை அடையத் துணிவுகொண்டது. அதன் (இளங்) குட்டி அத்துணிவிற்கு இடையூறாய் நிற்கின்றது. (இங்கு ஆங்கிலப் பாவலன் தென்னிசன் துக்கவருணனை நினைவில் வரலாம்). அக்குட்டியைத் தன் சுற்றத்தினிடம் ஓம்படைசெய்து, தன்னைத் தனது உடலினின்றும் பிரித்துக்கொள்ள உறுதிகொண்டது.

கொண்டு ஓங்கிய மலையின் ஒருபக்கத்தில் தாவிற்று. தாவியதும் ஆவிதவிர்ந்தது. மக்களுள், கணவனை இழந்தவர் கைம்மை நோன்பு காப்பவராய் வாழ்வது கண்கூடு. மந்தியோ அம்மக்களிடம் இல்லாத தலைக்கற்பு நிலைக்கப்பெற்றது. அப்பெறலருங் காட்சி,

"கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும் சாரல்"

என்று மனத்ததுபாடும் வாக்காயிற்று. இம்மந்தி அக்குரங்கினத்துள் அழகுடையதாயிருந்தும், அவ்வினத்தரசு (வாலி) இராமபிரானிடம் கூறியதுபோல, நான்முகன் படைப்பில் நமக்கேது கற்புமணம்? ஒருமணத்துக்கு இருமணமோ பலமணமோ செய்துகொள்வது ஒருசிறிதும் குற்றமாகாது; குரங்கிற்கும் வரம்புண்டோ என்று நினைக்கவில்லை. இதை உணர்ந்து தான் "கைம்மை உய்யாக் காமர் மந்தி" என்ருர்போலும்?

இங்கனம் சங்ககாலத்து நூல்களுள், தொடர்பாக இன்றி அங்கங்குத் தோன்றும் இயற்கை வருணனைகளை அறிந்து இன்புறுதல் தமிழ் கற்போர்க்கும் கற்ருேர்க்கும் இன்றியமையாதது.

இடைக்காலத்து நூல்களுள் வருணனைகள் மிக்கன. அவை உயர்வுநவிற்சி, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளை அமைத்துத் தன்மை நவிற்சியின் விலகிய நிலையினவாய் வேறுபட்டன. படவே, கற்பனையைப் பெரிதும் கருதும் சிலர்க்கே அவை மகிழ்ச்சி விளைக்கின்றன. இயற்கையை நாடும் இயல்புடையோர்க்கு வருத்தம் உண்டாக்காவிட்டாலும் விருப்பம் விளைத்தவில்லை.

இங்கு அவர்க்கு ஒன்று தெரிவித்தல்வேண்டும். விண்ணியங்கும் நாள் கோள்களின் இயல்புகளையும் மண்ணிலுள்ள வேர், கிழங்கு, பூ, காய், கனி, இலை, தளிர், மரம், கல் முதலியவற்றின் இயல்புகளையும் நீர், காற்று, நோய்நொடி, அவற்றின் மாற்று, ஒழிக்கும் வழிவகைகளையும், மக்கள் இயல்புகளையும்,

உடற்கூறுகளையும் உள்ளவாறு உணர்ந்து எழுதிவைத்த நம் மூன்னோர் பெருமையை எவரும் என்றும் போற்ற மறவார்.

இங்கு ஓர் இயற்கை வருணனையைப் பற்பல இடத்தில் இருந்து தொகுத்து எழுதி, இதைக் கற்பவர்க்கு இயற்கையோடு இயைந்த இன்பத்தைத் தோன்றச்செய்ய முயல்கின்றோம். முயற்சிமட்டும் எமது. பயன் அவ்வியற்கையினது.

உலகம் பொருட்காட்சி மன்றம். அதில் உயர்வற உயர் நலம் உடையவன் ஒருவன் பலவகைப் பொருள்களையும் தன்னைத் தாக்கமாட்டாத மூக்காலத்துள்ளும் அமைத்து வைத்துள்ளான். அவற்றைக் காண்பவர் அறிஞரே. அவர்க்குக் கண் கருவியாக இல்லை. அதைக்காண எது கருவியோ? அதுவே அவர்க்குக் கருவி. அக்கருவி எவரிடம் உண்டோ அவரையே திருவள்ளுவர் "கண்ணுடையர்" என்கின்றார்; மதிக்கின்றார். அக்கண்ணுடைய புலவர் பாவலர் நாவலர் கைவலர் எல்லாரும் இயற்கையன்னையைத் தொழுது, அவள் எழில் நலங்களை இனிதுணர்ந்து தத்தம் திறத்தில் அறிவிக்கின்றனர்.

உலகம் வறுமை நீங்கிச் செல்வம் ஓங்கி இனிது நடைபெறுமாறு விண்ணிலுள்ள கோள்கள் மழைபெய்தற்குரிய நிலையில் இயங்குகின்றன. அலையையும் குளிர்ச்சியையும் உடைய கரிய கடல்நீரைக் காலையில் முகந்து மாலையில் மலைவரிசையைச் சூழ்கின்றன சூல்கொண்ட மேகங்கள். "மழைவிளையாடுங் கழைவளர் அடுக்கம்" என்றதை நேரிற்காணலாம். தம்முடைய பொறுக்கமாட்டாத சுமை கரையுடைந்த குளத்து நீர் கழல்வது போல நீங்கும்படி மழையைப் பொழிகின்றன. வானத்தில் நெருங்கிய மேகங்கள் அரசன் போரில் யானைகளை வரிசையாக நிறுத்தியதுபோலிருந்தன. அம்மேகங்கள் இடிமுழக்கம்செய்தது அவனது போர்முரசு முழங்குவதுபோல் கேட்டது. அவை மழைத்துளிகளைச் சிதறியது அவன் பகைவர்மேற் செலுத்தும் அம்பின் கூட்டத்தைப் போன்றது. அவற்றின் மின்னலும் அவன் வேலும் ஒன்றுபோல் தோன்றின. அவை மழைபெய்தது அவன்வள்ளன்மையை ஒத்தது. மழைநீர் அரசனது படை போல எங்கும் நிறைந்து நிலத்தை மறைத்துவிட்டது.

(தொடரும்)

# *கந்தபுராணத்தில் காவியச்சுவை

வித்வான், திரு. கண்ணப்ப முதலியார் அவர்கள், P. O. L.,
சென்னை.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

நம் செந்தமிழ் மொழியில் சிறந்து விளங்கும் புராண இலக்கியங்களில் தலைசிறந்து விளங்குவது கந்தபுராணமாகும். கந்த புராணம் எவர்க்கும் சொந்தபுராணம் என்னும் தொடரே, இது சைவசமயத்தவர்கட்கே அன்றிப் பிறசமயத்தவர்க்கும் உரிய நூல் என்பதை விளக்கும். கந்தபுராணம் முருகப்பெருமானைக் கதாநாயகராகக்கொண்டு மிளிர்வதனுல், அம்முருகன் என்னும் சொல்லின் பகுதியாகிய முருகு என்பது இளமை, மணம், அழகு, கடவுள்தன்மை என்று பொருள்தந்து நிற்றலின் இந்நான்கையும் விரும்பாத மொழியினரோ சமயத்தினரோ எவரேனும் இருக்க இயலுமோ என்று சிந்தித்துப் பாருங்கள். ஆகவே கந்தபுராணம் எவர்க்கும் சொந்த புராணமே என்பதில் ஐயம் எழக்காரணம் இல்லை.

கந்தபுராணம் சிறந்த நீதிகளையும், இக்காலக் கருத்துக் கொண்டு காண்பதற்கேற்ற நவீனப் புதைபொருள்களையும் பெற்று விளங்குகிறது என்பது ஒருமுறை இந்நூலைப் படித்துப் பார்ப்பவர் காணுமல் இருக்க இயலாது.

மாதர் இன்பமே பேர் இன்பம் என்று கருதி, அவர் கண் மயக்கில் பட்டு இன்பத்திற்கு ஈடாகத் துன்பமே துய்க்கின்றனர் மக்கள் என்பதை நன்கு விளங்கிக்கொள்ளத் தக்கதான உவமை கொண்டு உணர்த்துந்திறனை,

துன்பம் நுகரும் வினையின் தொடர்ச்சியினோர்
இன்பம் நுகர்வார்போல் ஏந்திழையார் கட்பட்டார்
தன்பல் மிகநடுங்க ஞாளி தசையில்லா
என்பு கறித்திட்டால் இருஞ்சுவையும் பெற்றிடுமோ.

என்ற செய்யுளால் அறிந்து இன்புறலாம்.

---

* தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் 22—5—51 கந்தபுராணத் திருநாளில் நிகழ்த்திய சொற்பொழிவு.

பலநாள் வெயிலில் உலர்ந்து கிடந்த எலும்பை நாய் பெற்று அதைக் கறிக்குந்தோறும், தன்பல்லின் அசைவால் சிந்தும்செந்நீரை, எலும்பினின்று வருகின்ற சுவைநீரெனக் கருதிச் சுவைப்பதுபோலத் தன்கண் உண்டாகும் இன்பம் மாதர்பால் நின்றுவரும் இன்பமாக எண்ணித் தம் வன்மையை இழக்கும் மக்கள் அறியாமை என்னே என்று இரக்கம் கருதிப் பாடிய பாட்டாக அன்றோ இது விளங்குகிறது.

தந்தைசொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் யாரும்
செந்தழல வாயநிர யத்தினிடை சேர்வர்'

என்னும் செய்யுளின் பொருளை உணர்ந்தவர் எத்துணை நல்வழியில் நடக்க ஏதுவாகும் என்று சொல்லவும் வேண்டுமோ? இன்னோரன்ன நீதிப்பாடல்கள் நமது கந்தபுராணத்தில் கணக்கின்றி இருக்கின்றன.

ககோள பூகோள நுட்பங்களை உணர்த்தும் குறிப்புக்கள் பல கந்தபுராணத்தில் உண்டு. உலகம் உருண்டை என்பதை நம்மவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். உலகத்திற்கு அண்டம் என்னும் பெயராலும் அதன் உண்மை உணரக் கிடக்கும், அண்டமோ முட்டை வடிவினது. பூகோளத்தைப் பற்றி அறிவிக்கும் ஆசிரியர்கள் நமக்கு, இங்கு நாம் சூரிய வெளிச்சத்தோடு இன்புறுகையில் மற்றோர் உலகில் அதாவது அமெரிக்கா போன்ற இடங்களில் இருளில் துன்புறுவர்; அவ்வாறே அவர்கள் ஒளியுற்றபோது நாம் இருள் உற்று இருப்போம்; இந்தமாறுதல் உலகம் உருண்டையாக இருந்து தன்னைத்தானே சூரியன்முன் சுற்றும்போது ஏற்படுவதாகும். சூரியன் முன் இருந்து சுற்றும் போது பகலும், பின்னால் விளங்கும்போது இருளும் அடைகிறது என்று கூறி நம்மை மயக்கப் பார்க்கின்றனர். இது நாம் அறியாததன்று. சூரபதுமனுடைய இளவலான தாரகாசூரனை முருகப்பெருமான் வேல் மாய்த்தது. இது நிகழ்ந்த நேரம் மாலைப் பொழுது. சூரியன் மறைந்து செல்லுகின்ற நேரம். இதனை ஆசிரியர் கூறும்போது, சிறந்த பூகோளக் கருத்தை விளக்கிச் செல்கின்றார். அதாவது முருகன் தாரகனைக் கொன்ற செய்தியை

இவ்வுலகில் உள்ளவர் உணர்வர்; அடுத்த உலகில் உள்ளவர்களும் இதனை அறிந்துகொள்ள நானே புறப்பட்டுச் சென்று சொல்லிவிடுகிறேன் என்பான்போல மறைந்தான்! என்பதாம். இக்கருத்தைக் குறிக்கும் பாட்டே,

ஒப்பறு சூர்பின் னேனை ஒருவன்வேல் அட்ட தன்மை
இப்புற உலகில் உள்ளார் யாவரும் உணர்வர் இன்னே
அப்புற உலகில் உள்ளார் அறிந்திட யானே சென்று
செப்புவன் என்பான் போலச் செங்கதிர் மறைந்து போனன்.

இதிலிருந்து இங்கு ஒளி தந்தவன் அடுத்த உலகிற்கு ஒளி தரப் போகிறுன் என்பதால் உலகம் உருண்டையாய் இருந்து, தன்னைத்தான் சுற்றிவருவதால் பகலும் இரவும் உண்டாகின்றன என்பனபோன்ற கருத்துக்கள் தொனிக்கின்றன அன்றே?

ஆகாய விமானத்தைப்பற்றிய செய்தி அனைத்தும் இப்புராணத்தில் உண்டு. இக்காலத்தில் இவ்வாகாய விமானம், செய்துவரும் தொண்டு பலவாகும். போர்க்காலங்களில் அழிவு வேலைக்குப் பயன்பட்டாலும் அமைதியான காலத்தில் ஆக்க வேலைக்குப் பயன்பட்டு வருகிறது. தபால்களைச் சுமந்து செல்கிறது. ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்கு மக்களை வெகு விரைவில் தாங்கிச் சென்று சேர்க்கிறது.

இப்படிச்சென்று சேரும் மார்க்கத்தை ஆங்கிலத்தில் Air root என்று கூறிப் பெருமை பேசிக்கொள்கின்றனர். இந்த ஆகாயவழி நமக்குப் பழைய வழியே யாகும். நம்மவரும் இத்தகைய வானவூர்திகளில் சென்றனர். நாம் எடுத்துப்பேசுவது கந்தபுராணம் ஆதலின் இதனின்றே இதற்குச் சான்று காட்டுவோமாக. திருமால், பிரமன் இந்திரன் முதலான தேவர்கள் தன்னைச்சூழ வீரவேல் தடக்கை அண்ணல் ஆகாய விமானத்தில் ஏறி வானவழியே சென்றனன் என்று கச்சியப்பர் கூறியதைக் காணும்போது நாமும் இந்த நாகரிகத்தில் வாழ்ந்தவர் என்பதை எண்ணி இறுமாப்பு அடைவோம் அல்லவா?

மண்படு புவனம் போற்றும் மன்னகேள் புயங்க மீது
கண்படு முகுந்தன் வேதாக் கடவுளர் தலைவ னோடு
எண்படு துணைவர் ஆனோர் யாவரும் புடையில் சூழ
விண்படு நெறியில் சென்றான் வீரவேல் தடக்கை அண்ணல்.

'விண்படு நெறியில் சென்றான்' என்பது **Air root** என்பதைத் தவிர்த்து வேறு யாதாக இருக்க முடியும்?

இக்கால நிகழ்ச்சிகளுக்கேற்ற கருத்துப்படி காணத்தக்க பாடல்களும் கந்தபுராணத்தில் உண்டு. நம்மைக் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக வன்மையாய் அடிமைப்படுத்தி ஆண்டவர் ஆங்கிலேயர் என்பதை நாம் மறுக்கவோ மறக்கவோ இயலாது. அப்படிப்பட்டவர் இப்பொழுது தம் வன்மையை இழந்து தம் ஆட்சியை நம்மிடம் ஒப்பித்துச் சென்றது சரித்திர உண்மையாகி விட்டது. நம் ஆட்சியைப்பெற்ற நாம் வன்மையில் மிக மிகக் குறைந்தவர். இது குறித்து யாரும் விளக்கவேண்டாம். இது எங்கும் எக்காலத்தும் நிகழும் நிகழ்ச்சிதான் என்பதை நாம் உணர அன்றோ, நம் கந்தபுராண ஆசிரியர் தாம் கூறும் கதையின் நிகழ்ச்சியோடு,

கலகல மிழற்றும் தண்டைக் கழலடிச் சிறுவன் கைம்மாத்
தலையுடை இளவல் தன்னைத் தடிந்ததற் புதத்த தன்றால்
வலியரும் ஒருகா லத்தில் வண்மையை இழப்பர் ஆன்ற
மெலியரும் ஒருகா லத்தில் வீரராய்த் திகழ்வர் அன்றே.

என்று பாடித்தந்துள்ளார்.

அண்மையில் தேர்தல் வரப்போவது நாம் அறிந்ததே. அதில் கலந்து வெற்றிகொள்ள, பல கட்சியினர் முயன்று வருகின்றனர் என்பதையும் நாம் அறிவோம். சில புதுப்புதுக் கட்சிகளும் முளைக்கின்றனர். இவற்றின் நோக்கம் முன்பு நீதிக் கட்சி ஆட்சியில் இருந்தது. இப்பொழுது காங்கிரஸ் கட்சி ஆட்சி பெற்றிருக்கிறது. இவற்றிற்கு இடையே நாமும் ஏன் அதனைக் கைக்கொள்ளக் கூடாது என்பதாகும். இப்படிக் கருதுபவர் கட்சியினர்க்கு நம் கந்தபுராணப் பாடலாகிய,

பானுஎன் றுரைக்கும் மேலோன் பகற்பொழு தெலாம்கைக்
[கொண்டான்
ஏனைய மதியப் புத்தேள் இரவினுக் கரச னானான்
யானிவற் றிடையே சென்று நண்ணுவன் என்று செந்தீ
வானவன் போந்த தென்ன வந்தது மாலைச் செக்கர்.

என்பதை ஏன் பாடிக் காட்டக்கூடாது?

ஆங்கிலேயர் தம் அன்புக்குரிய மாதரைக் கையால் அணைத்துக்கொண்டு வீதிவழியும், சோலையிடத்தும் செல்வது நாம் காண்கின்ற காட்சியாகும். இச்செயல் இவ்வினத்தார்க்கே உரியசெயல் என்று எண்ணுகிறவர் பலர். இது இவர்கட்குரிய செயல் அன்று. நம்மவர் துய்த்துச் சிந்திய செயலேயாகும். நம்மவர்களைப்போல ஐம்புலன்களும் ஆரத் துய்க்கின்றவர்களும், அவற்றை அறவே அடக்கி ஒடுக்கி ஆள்கின்றவர்களும் வேறு எவ்வினத்திலும் காணமுடியாது. நமதுநாட்டுக் காதலரும் ஒருவரை ஒருவர் இணைபிரியாது இயைந்து கையால் அணைத்துச் சென்றதைக் கந்தபுராணச் செய்யுள்கொண்டு தெளியலாம்.

ஏமரும் கலாப மஞ்ஞை இனமெனச் செல்லும் மாதர்
மாமருங் கிறுங்கொல் இற்ருல் மதன்அர சிறக்கும் என்ற
காமரு கவற்சி கொள்ளக் கரத்தினல் அவரைப் பற்றி
தாமருங் காகப் போனர் தார்முடி இளைய ராஞேர்,

என்பது அப்பாட்டு.

இத்தகைய பல்சுவையும் பரந்து விளங்கும் காரணத்தால் தான் பெரும்புலவர்கள் எல்லோரும் இந்நூலை நன்கு பயின்று, அப்பயிற்சியின் மிகுதியால் தாம்பாடிய நூல்களிலும் இந்நூலின் சொல்லையும் பொருளையும் சுவைபடக் கலந்து பாடி அமைப்பாராயினர். இதற்கு எடுத்துக்காட்டாகக் கம்பரையும் புகழேந்தியாரையும் ஈண்டுக் குறிப்பிடுவோம். ‘வெண்பாவில் புகழேந்தி, விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்’ என்னும் புலவர் பெருமக்களே நம் கந்தபுராணத்தைப் படித்து இன்பம் எய்தினர் என்று காட்டியபின் ஏனைய புலவர் எத்துணை அளவிற்குப் போற்றிப் படித்திருப்பர் என்பது சொல்லாமல் புலனுகும்.

கந்தபுராணத்தில், இரு தம்பதிகள் குளத்தில் நீராடச் சென்றதாகவும், அப்படிச் சென்று நீராடுகையில் தலைமகன் நீரை வாயில்பெய்து கொப்பளித்து நீரில் உமிழ அதுகண்டு தலைமகள் தன்னை அக்குளத்தில் வளர்ந்திருந்த தாமரை மலர் கட்கிடையே முகத்தைத் தவிர்த்து ஏனைய உறுப்பு மறைத்துக் கொண்டிருக்க, அத்தலைவன் தன் மனைவியின் முகத்தையும் தாமரை மலர் என்று எண்ணியதாக அவள் தன் எதிரில் தன் முகத்தைக்காட்டி இருந்தபோதும் காணுது அயர்ந்தான் என்று அழகுபடச் சித்திரித்துக் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்,

குளத்திடைப் புனல்வாய்ப் பெய்து கொப்பளித் திடுவான் தன்மேல்
உளத்திடை வெகுளி எய்தி ஊடினள் ஒருத்தி ஏகி
முளைத்திடும் கமலக் கானில் முகமலா உறுப்பு முற்றும்
ஒளித்தனள் நிற்ப நாடிக் காண்கலன் உலைதல் உற்றான்.

என்று பாடியுள்ளார்.

இக்கருத்தை அப்படியே தழுவிக்கொண்டார் புகழேந்திப் புலவர். அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிமட்டும் வேறு, அங்கும் இரு காதலர் நீராடப்போயினர். இருவரும் நீராடுகையில் ஒரு பந்தயம் போட ஆரம்பித்தனர். யார் நீண்டநேரம் நீருக்குள்ளே இருக்கின்றனரோ அவர்கள் வென்றவர் என்றும், விரைவில் எழுந்து கொள்பவர் தோற்றவர் என்றும் முடிவுகட்டிக்கொண்டு மூழ்கினர். தலைவி மூழ்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் தலையைத் தூக்கிவிட்டுத் தாமரை மலர்கட்கு இடையே நீரில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். காதலனோ தான் தன் காதலிக்குத் தோற்றல் கூடாது என்பதற்காக நீண்டநேரம் நீரில் மூழ்கிக்கிடந்தான். அவனாலும் முடியாமல் தலையை மேலே தூக்கிவிட்டான், அப்படித் தூக்கியவன் தன்காதலி தாமரை மலர்கட்கு இடையே தலையைக்காட்டி நிற்பதால் அதுவும் தாமரைமலர் என்று கருதி இன்னமும் அவள் நீரினுள்தான் இருக்கின்றாள்போலும் என்று அவளைக் காணாமல் அயர்ந்தான். இக்காட்சியைத்தான் புகழேந்தியார்,

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலர் அலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த—மின்னுடைய
பூணாள் திருமுகத்தைப் புண்டரிகம் என்றயிர்த்துக்
காணா தயர்வானைக் காண்.

என்று பாடினார், இப்பாடல் கந்தபுராணப் பாடலைத் தழுவிப் பாடப்பட்டது என்பதில் ஐயமுண்டோ.

இனிக் கம்பர் எடுத்தாண்ட திறத்தையும், காண்போமாக. கம்பர் தம் நூலில் பரமனைக் கடலாகவும். பல் சமயங்களை நதிகளாகவும் குறிப்பிட்டு,

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலும், இயம்பரும் பொருளி தென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்ததன்றே.

என்று பாடினார்.

இக்கருத்தைக் கம்பர் எங்கிருந்து எடுத்தார். நம் கந்த புராணத்தினின்று அன்றே எடுத்துக்கொண்டனர்.

யாதொரு பொருளை யாவர் இறைஞ்சினும் அதுபோய் முக்கண்
நாதனை அடையும் அம்மா ஆங்கது போலத் தொல்லை
வேதமு துரைக்க நின்ற வியன்புகழ் அனைத்தும் மேலாம்
நாதனை அணுகும் எல்லா நதிகளும் கடல்சென் றன்ன.

என்பது அக்கந்தபுராணப் பாடல்.

கம்பரது கந்தபுராண ஆட்சிக்கு மற்றொரு சான்றையும் காட்டி இக்கருத்தினை நிறுவுவோமாக.

இளஞ் சிறுவர்கள் குதிரைபூட்டிய தேரினை ஊர்ந்து சென்றனர். அத்தேரின் உருளைகள் பொன்னால் இயன்றவை. அவ்வுருளைகள் நிலத்தில்பதிந்து உருண்டபோது அவ்வுருளையின் பொன்னை மணித்தலம் சிறிது சிறிது கவர்ந்துகொண்டது. இதனின்று ஆசிரியர் சிறந்த கருத்தை விளக்க, பொருள் எவரும் விரும்பும் தன்மையது; இதனை, முனிவரும் விரும்புவர் என்னும் கருத்தில்,

குருளை மான்பிணித் திளஞ்சிறார் ஊர்ந்திடும் கொடித்தேர்
உருளை ஒண்பொனை மணித்தலம் கவர்ந்துகொண் டுறுவ;
வெருளின் மாக்களை வெறுப்பதென் முனிவரும் விழைவார்
பொருளின் ஆசையை நீங்கினர் யாவரே புவியில்.

என்று பாடினர். இதே நிகழ்ச்சியைக் கம்பர் தம் கருத்தில் வாங்கிக்கொண்டு வேறு முறையில் மற்றொருகருத்தை விளக்க வேண்டி,

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தன்னிற மாக்கிய இரதம்.

என்று பாடினர். இங்ஙனம் கம்பர் பாடுதற்கு வாய்ப்பைத் தந்தது, கந்தபுராணப் பாடலே அன்றி வேறன்று என்று அறியிட்டு உறுதியாய்க் கூறலாம், இப்படிப் பல்லாற்றானும் சிறந்து விளங்கும் நூலைப் படித்துப் பயனுற வேண்டியது நம்மனோர் கடமை அன்றே,

(வரும்)

# திருக்கடவூர் ஆலயத்தில்

வழக்கம்போல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆண்டு ஜன்ம நக்ஷத்திரவிழா இவ்வாண்டும் ஐப்பசித்திங்கள் 29ம் நாள் வெள்ளிக்கிழமை (14—11—52) திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவர சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது. அதனுடன் தேவஸ்தான தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் கலந்து கொண்டது. இவ்விழா திருமுறை மாநாடாகக் கொண்டாடப் பெற்றது.

மாநாடு முதனுள் காலையிலிருந்து பிரசார மண்டபத்தில் தொடங்கி நடைபெற்றது. அன்றைய நிகழ்ச்சிக்குத் தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டித்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்து, முதல் திருமுறையைப்பற்றி ஓர் சொற்பொழிவும் நிகழ்த்தினுர்கள். அன்று காலையிலும் மாலையிலுமாக நிகழ்ச்சியிற் குறிப்பிட்டவாறு முதல் எட்டுத் திருமுறைகளைப் பற்றிய பேச்சுக்கள் நிகழ்ந்தன. அந்த அளவில் அன்றைய மாநாட்டு நிகழ்ச்சி, கடவுள் வாழ்த்துடன் முடிந்தது. அடுத்து இன்னிசை விருந்து.

தருமபுர ஆதீன இசைக்கல்லூரி இசையாசிரியர் சங்கீத பூஷணம், தேவாரமணி திரு. P சுவாமிநாத முதலியார் சுமார் இரண்டுமணி நேரம் இசையமுதத்தை வழங்கினுர்கள். இந்த இசைவிருந்திற்கு ஆதீன இசைக்கல்லூரித் தலைமையாசிரியர் திரு. சம்பந்தம் பிள்ளை அவர்கள் பிடிலும், இசைக்கல்லூரி ஆசிரியர் குத்தாலம் பிர்மஸ்ரீ விசுவநாத ஐயர் அவர்கள் மிருதங்கமும் இசைந்து இயம்பி அனைவரையும் பரவசமுறச் செய்தன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலையிலும் மாலையிலும் எழுந்தருளி வழிபாடு புரிந்தும் புரிவித்தும் திருநீறு வழங்கினுர்கள்.

அன்று காலை 7 மணிமுதல் ஸ்ரீ அமிர்தகடேசுவரருக்கும், ஸ்ரீ அபிராமியம்மைக்கும், ஸ்ரீ காலசங்கார மூர்த்திக்கும் ஏகதின லக்ஷார்ச்சனை தொடங்கி நடைபெற்றது, மாலையிலும் 5 மணி முதல் தொடங்கி நடைபெற்று இரவு மகாபிஷேகத்துடன் முடிந்தது. அம்மைக்குச் சந்தனக்காப்பு அலங்காரம் அன்பர் கண்ணுக்கு ஆனந்தம் அளித்தது.

சமயாசாரிய சுவாமிகளுக்கும் மாநாட்டின் தொடக்கத்தில் அபிஷேக ஆராதனை நடைபெற்றது. சந்நிதியிலேயே திருமுறைகளுக்கு அலங்கார ஆராதனைகள் செய்து திருமுறைப் பாராயணத்துடன் பிரசார மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்துகொண்டு வரப்பெற்றது. திருமுறைப் பாராயணத்திற் கெனப் பல ஊர்களிலிருந்தும் வரவழைக்கப் பெற்றிருந்த இன்னிசைத் தேவாரமணிகள் பலர் மாநாட்டின் இடையிடையே திருமுறைப் பாராயணம் செய்தார்கள். மறுநாள்.

*14—11—52* காலை *9* மணிக்கே பிரசார மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமாயிற்று. தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவாதலின் அவ்வகுப்பு மாணவர் மாணவிகளும் திருமுறைப்பாராயணத்தில் கலந்து கொண்டார்கள். ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களும் திருமுறையோதினர், தேவார இசைமணிகளின் பாராயணமும் நடந்தன. மணியும் $10\frac{1}{2}$ ஆயிற்று. விழாத்தலைவர் சென்னை சொல்லின் செல்வர், **திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்** B. A., B. L., ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுடன் வழிபாடு முடித்து விழா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இருவர்களும் தத்தமக்குரிய இடத்தில் அமர்ந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆசீர்வாதத்துடன் திரு. பிள்ளையவர்கள் தலைமை யேற்றூர்கள். ஆசியில் சமயத்தின் சிறப்பு, திருமுறைகளின் பெருமை ஆகியன குறிப்பிடப்பெற்றன. தலைவர் அவர்கள்,

"திருமுறைகளில் கவிவளம், காட்சிவளம் என்ற பல வளங்களும் உள்ளன. அடியார்க்கெளியன் அம்பலத்தானை மனங் கசிந்து பாடிய ஞானசம்பந்தர், அப்பர் போன்ற பெருமக்கள் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினுர்கள்; ஞானசம்பந்தர் சிறுபிள்ளை. பிள்ளை உள்ளம். திருக்குற்றுலத்தின் குறும்பலா ஈசனை என்ன அழகாகப் பாடியிருக்கிறுர்? ஒரு களிறு தன் கூந்தற் பிடியை அணைத்துக்கொண்டு, மலர்ந்த வேங்கைப் பூவை மத்தகத்தில் சூடிக்கொண்டு, குறும்பலா மரத்தைச் சுற்றி வந்து தலையால் வணங்கியது என்று பாடுகிற பாடலிலே இருக்கின்ற இயற்கை வளத்தைக் காணுங்கால் நம்முள்ளம் நம்மையறியாமல் எழுச்சி பெறுகிறதல்லவா?

தமிழர் பண்பாடு தமிழர் நாகரிகம் எல்லாம் திருக்கோயில் களாலேயே விளங்குகின்றன. திருக்கோயில்கள் நம்முடைய வரலாற்று ஏடுகள். நமது அரசர்கள் கோயிலைக் கட்டுவார்கள் அல்லது குளம் தோண்டுவார்கள் அல்லது ஏரிகள் வெட்டு வார்கள். இப்படியே தங்களுடைய செல்வங்களின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி வந்தார்கள். ஒரு சோழனுடைய புகழ் தஞ்சை இராசராசேசுவரமாயும், ஒரு சோழனுடைய புகழ் கங்கை கொண்ட சோளேச்சரமாயும் விளங்கிக் கொண் டிருக்கின்றன.

நாட்டிலே உள்ள தீயஎண்ணங்கள் நலிவு சக்திகள் ஒடுங்க திருக்கோயில்களும், திருக்கோயில்களைச்சிறப்பிக்கும்தேவாரப் பாடல்களுமே சிறந்த சாதனங்கள். அவற்றைப் பலகாலும் பலமுறையும் பலகோணங்களிலிருந்தும் ஆராயவேண்டும். அதற்கு இதுபோன்ற மாநாடுகள் பெரிதும் பயன்படும். அதற் காகவே அருளுருவாகிய மகாசந்நிதானம் அவர்கள் தேவாரப் பாடசாலைகள் வைத்தும் தேவார ஓதுவார்களை ஒன்று கூட்டியும், இசையால் தமிழ்பரப்பிய ஞானசம்பந்தரது அரும் பணியை ஆற்றிவருகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஊரும் வரலாற்றை அடிப்படை யாகக் கொண்ட ஊர்கள்; எல்லாம் பேருக்கேற்ற வரலாற்றுப் பெருக்கமுடைய ஊர்கள்; உதாரணமாக, அம்பாசமுத்திரம்; இது, கிரியம்பா சமுத்திரம் என்றிருந்தது முன்பு. ஆந்திர நாட்டிலே இருந்த பெண்மணியான கிரியம்பாள் தமிழ் நாட்டுக்கு வந்து தன் பொருளை அகத்தியர் ஆணைப்படி, தெய்வீகப்பசுமாடு படுத்த இடத்தில் ஒருபெரிய ஏரி வெட்டி னள் என்று கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. இப்படியிருந்த ஊர்தான், கிரி யென்பது கெட்டு அம்பாசமுத்திரம் என்று இன்றுமாறியது. சமுத்திரம்போன்ற பெரிய ஏரிகள்; பொருள் படைத்தவர்கள் பயனுடையவழியிலே பொருளைச் செலவு செய்தார்கள்என்பதற்குக் கங்கைகொண்டசோழன் வெட்டிய "ஏரியும் சான்றாகும்." என்று முன்னுரைகூறி, பின் பேசப் புகும் திருமந்திரத்திற்குத் தோற்றுவாயாக மந்திரம் என்ற சொல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தொல்காப் பியத்தில் 'நிறைமொழிமாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரமென்ப' என்றும், திருக்குறளில் 'நிறைமொழி

மாந்தர் பெருமைநிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்றும் ஆளப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலேயும் இக்காலத் தினைப்போல முன்னே மந்திரங்கள் இருந்தன; தமிழ் மந்திரங்கள் அவை; இந்த மந்திரமும் ஒரு திருமுறையாக இருக்கிறது. அதுதான் பத்தாந்திருமுறை. மேலும் திரு முறைகள் இவ்வாறு நமக்கெல்லாம் சிறந்த கருத்துக்களைத் தந்து நிற்கின்றன. எனவே தமிழர் அனைவரும் தவறாது திருமுறைகளை ஓத வேண்டும்; ஓதி உணர்ச்சிமிக்கு ஒளிபெற வேண்டும்''

என்றெல்லாம் குறிப்பிட்டுத் தமது தலைமையுரையை நிகழ்த்தினார்கள். பின்னர் தருமையாதீனக் கல்லூரி மாணவர் சொ. சிங்காரவேலன் 9-ம் திருமுறைபற்றிப் பேச அத்துடன் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது. கட்டளைமடத்தில் மாகேசுர பூஜை சிறப்பாக நிறைவேறியது. மாலை 6 மணிக்கு மீண்டும் நிகழ்ச்சிகள் தொடங்கின.

மாலை நிகழ்ச்சியில் குடிதண்ணீர்க் குழாய்த் திறப்பு விழா வும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக அமைக்கப் பெற்றிருந்தது. பொது நலத்தொண்டுகள் ஆற்றிவருவதே தம் கடமை எனக் கருதிப் பல ஆண்டுகளாக அப்பணியைச்செய்துவருபவர்களும், தஞ்சை மாவட்டத் துணைத்தலைவரும், பேரறிஞருமாகிய மாயூரம் **திரு. C. மருதவாணம் பிள்ளை அவர்கள் M. L. C.** திறப்பு விழாப் பணியை ஏற்றுக்கொண்டு, தண்ணீர்க் குழாயைத் திறந்து வைத்துப் பேசுகையில் ஆதீனச்சார்பில் காலமறிந்து இடமறிந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெருங்கருணையுடன் ஆற்றி வரும் அரும்பணிகளைப் பாராட்டிப் தமது வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

தருமபுர ஆதீனத் தமிழ்க் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் ச. தண்டபாணி தேசிகரவர்கள் '10-ம் திருமுறை' என்ற தலைப்பில் பேசுகையில், திருமூலரது அரியதத்துவப் புலமையையும், ஒன்பது தந்திரப் பாகுபாடுகளையும் விளக்கிச் சித்தாந்த செந்தமிழ்த் திறங்களை விரிவாக எடுத்து விளக்கினார். அடுத்து, சீகாழி கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் '11-ம் திருமுறை' பற்றிப் பலபடப் பேசினார்கள். பிறகு திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் பெரிய புராணத்தைப் பற்றிப் பேசுகையில், சேக்கிழாரது செய்யுள் நலங்களை - கவிதாமேன்மையை - எடுத் துக்காட்டி 'என்றும் இன்பம் பெருகும் இயல்பை' இனிதே விளக்கினார்கள். இறுதியாகத் தலைவர் அவர்கள் முடிவுரையில் தமிழர் பண்பாடு, கலாச்சாரம் இவற்றை விளக்கி, நாடு

மொழி சமயம் இவைகளுக்கு அரும்பணி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைப் பாராட்டி முடித்தார்கள். தேவஸ்தானத் தேவார வகுப்பு மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பரிசுப் பொருள்களை வழங்கினார்கள். பரிசு வழங்கலாகிய இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், எல்லோருக்கும் ஆசிவழங்கும் முகத்தால் "உலகம் உய்ய நம்முடைய பெரியவர்கள் இயங்குவ நிற்பனயாவையும் கடவுள் காட்சியாகவே கண்டார்கள். அவர்களுக்கு மேகமெல்லாம் இறைவன், மழையெல்லாம் அவன் கருணை, வயலெல்லாம் அவன்மேனி, பயிரெல்லாம் அவன் ஞானம்; விளைவெல்லாம் அவனது சிவபோகம். இப்படியே எல்லாவற்றையும் கண்டார்கள். நம்மிடத்திலே அந்த அனுபவம் குறைந்ததாலேயே மழையில்லை, விளைவில்லை, எதிலும் துன்பம், எங்கும் துன்பம், நமக்குத் துன்பம் தொலைக்க ஆசையுண்டு. ஆனால் வழிதெரியாது, தோத்திரித்தால் போதும். அதுவே சுலபமானவழி; தோத்திரிக்க நமக்குத்தெரியாது. அதனால் ஞானசம்பந்தர் முதலியோர் பாடல்களை நன்றாக உணர்ந்து பாடவேண்டும். அதற்கு இதுபோன்ற மாநாடுகள் தேவைதான். இதில் கலந்து கொண்ட எல்லோருக்கும் எல்லா நன்மைகளும் மேலும் மேலும் உண்டாவதாக." என்று தமது ஆசியுரையை அனைவருக்கும் வழங்கினார்கள்.

இசை மணிகளது இன்னிசை வாழ்த்துடன் மாநாட்டு நிகழ்ச்சி நிறைவுற்றது. அடுத்த நிகழ்ச்சி திருமுறை ஊர்வலம்.

பிறகு திருமுறை வழிபாடு நடந்தது. யானைமீது திருமுறைகள் எழுந்தருளச் செய்யப்பெற்றன. ஊர்வலம் தொடங்கியது. திருமுறைப் பாராயணத்தில் தலை சிறந்து விளங்கும் தேவார இசைமணிகள் பலர், முறையாகச் சம்பிரதாயப்படி தக்க இன்னிசைக் கருவிகளின் துணைகொண்டு தேவார பாராயணம் செய்து கொண்டு திருமுறைக்கு முன் சென்றார்கள். வீதிகளில் மக்கள் தத்தம் இல்லங்களின் முற்றத்தில் நீர்தெளித்துக் கோலமிட்டு, தேங்காய் பழமாதியவைகளை நிவேதித்துத் தத்தம் அன்புக் காணிக்கையைச் செலுத்திக்கொண்டார்கள். தேவாரப்பாடலின் இன்னிசை மக்கள் அனைவரையும் அன்பு வெள்ளத்தில் அழுந்தச்செய்தது. அதற்குமேல் வழிபாடும் சிறப்பாக நடைபெற்றது.

அன்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஜன்ம நக்ஷத்திரத்தை முன்னிட்டு காலை 11 மணி வரையில் விசேஷ அபிஷேக ஆராதனை ஹோமம் முதலியன நடைபெற்றன.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஸ்ரீ மார்கழிமீ 1௨ முதல் 30௨ வரையில்)
(15—12—52 முதல் 13—1—53 வரையில்)

## 1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட கோசார மேஷராசி பலன், மிசிரமாய் நடக்கும். சுகமும் துக்கமும் மாறிமாறி நடக்கும். சென்றமாதம் போலவேதான்நடக்கும், பரணிக்கும் மாதம் ஆரம்பத்தில் சுபமாககாட்டி, பின்பு பூரா துக்கபலனையே தரும். ஷி பரணிக்கும் சென்றமாத பலனே பெரும்பாலும் நடைபெறும். கிருத்திகை முதல்பாதக் காரர்கள்மாத்திரம், சற்றுச் சுகமடைவார்கள். பொதுவாக மேஷராசிக்காரர்கள் எல்லோருக்குமே நன்மையிராது. சிலர் பக்தியினல் ஜயிப் பார்கள்; சிலர் பணப்பெருக்கினுல் செலவுசெய்து ஜயிப்பார்கள். இரண்டும் இல்லாதவர்கள் துன்பத்தையே அடைவார்கள். புதனும், வியாழனுமே அசுபமாகும்.

## 2. விருஷபம். கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை ரோஹிணி இருநக்ஷத்திரமும் சம்பந்தப்பட்ட விருஷப ராசிபலன் சற்று நலன்காட்டும். வியவசாயிகள் சந்தோஷமடைவார்கள். தொழிலாளிகள் மிக்க சந்துஷ்டி அடைவார்கள். நாஸ்திகர் அழிவார். சாதுக்கள் கடவுளால் ரக்ஷிக்கப்படுவார்கள். மிருகசீரிஷ பலன், தெய்வசக்தியால் ஜயமுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் இடம்மாறலும், தன நஷ்டமும் அடைவார்கள். 3 நக்ஷத்திரக்காரர்கள் எல்லோருமே பொதுவாய் அதிகக் கஷ்டப்படாமல் காலம் கழிப்பார்கள். சனியும் வியாழனும் சுபவாரமாகும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

திருவாதிரை பலன் மாதம் நடுப்பகுதி பத்துத்தினங்களில் சுபமேற்படும். முன்னும் பின்னும் நஷ்டமும் கஷ்டமும்காட்டும். மிருகசீரிஷமும் புனர்பூசமும் சம்பந்தப்பட்ட மிதுனராசிபலன் சுபமாகும். வியவசாயத்தில் லாபம், மேலோர் பெரியோர் சேர்க்கை, வியவஹாரவெற்றி, தூரத்திலிருந்து பந்துமித்திர

சமாகமம், கீர்த்தி அசாத்திய சாதனம் இவைகள் ஏற்படும். ஆனாலும், புனர்பூசக்காரர்கள் மாத்திரம் பூர்ணமாக சுபம் அனுபவிக்க முடியாமல் ஈதிபாதைகளாலும் சத்துருக்களாலும் ரோகத்தாலும் பாதிக்கப்படுவார்கள், சனிவாரம் சுபமாகும்.

### 4. கடகம். புனர்பூசம் ¼. பூசம் ஆயில்யம்

இம்மூன்று நக்ஷத்திரங்கள் சம்பந்தப்பட்ட கடகராசிக்காரர்கள் எல்லோருமே சுகமடைவார்கள். தீராத கடனும் நோயும் விலகும். நஷ்டதனம் கிடைக்கும். வியாபாரவிருத்தி லாபம், சத்துருநாசம், உத்தியோக மேன்மை, தெய்வபலம் கிட்டுதல், சாதுசங்கம புண்ணிய தீர்த்த ஸ்நானம் எல்லாம் அனுயாஸமாய் சித்திக்கும். செவ்வாயும் வியாழனும் சுபவாரமாகும்.

### 5. ஸிம்மம். மகம், பூரம், உத்திரம் ¼.

இந்த மூன்று நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட சிம்மராசிக்காரர்கள் சந்தோஷமடைவார்கள், தொழில் மேன்மை ஏற்படும். வியாபார விருத்தியாகும். உத்தியோகத்தில் மாறுதலுடன் லாபம் ஏற்படும். வெகுதூர யாத்திரையிலிருக்கும் முக்கிய சிநேஹிதனல் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். பூரத்துக்கு மாத்திரம் இவ்வளவு சுபபலன்களும் அல்ப்பமாகப் போய்விடும். அஹங்கார மமகாரம் வலுக்கும். வியாழனும் ஞாயிறும் சுபவாரமாகும்.

### 6. கன்னி. உத்திரம் ¾. ஹஸ்தம், சித்திரை ½.

சித்திரை நக்ஷத்திரத்துக்கும், உத்திர நக்ஷத்திரத்துக்கும் இம்மாதம் சுபமாகும். ரோக நிவாரணம், சத்துரு நாசம், உத்தியோக லாபம், கீர்த்திபத்திரம், மேலோர் பெரியோர் ஆதரவு கிட்டுதல், தெய்வபலம் பிரகாசித்தல், கஷ்டங்களும் தொல்லைகளும் விலகுதல் ஏற்படும், ஹஸ்தநக்ஷத்திரக்காரர்களுக்குப் பலகஷ்டங்கள் ஏற்பட்டு விலகுதலும், ஆரம்பத்தில் எடுத்தகாரியமெல்லாம் ஜயம்போல்காட்டி முடிவில் நஷ்டம் ஏற்படுதலும், ஈதிபாதைகளும் அதிகத்தொல்லைகளும் மனச்சாந்தி இல்லாமல்போதலும் கிலேசமும் காட்டும், அதிக உஷ்ணத்தால் ரோகம் காட்டும், தசாபுக்தி பூர்ணசுபமுடையவராகில் எல்லா சிரமங்களும் தெய்வபலத்தால் அனுயாஸமாய்

மாறும், சதா தெய்வசிந்தனை ஏற்படும். குருவாரமும் சுக்கிர வாரமும் சுபமாகும்.

**7. துலாம்** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

விசாகம் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் ஆகில் நஷ்டமடைவார்கள், தொழிலாளியாகில் லாபமடைவார், பிரபுக்களாகில் கஷ்டத்தில் சிக்கிக்கொள்வார்கள், உத்தியோகஸ்தர் பிரமோஷனுடன் கீர்த்தியடைவார்கள். வியவஸாயியும் நஷ்டமடைவான். மற்ற இரண்டு நக்ஷத்திர பலனும் மனக்கவலையுடனே சுகம் காட்டும். தொழில் ஏற்றம், பரஸ்தலவாஸம், நஷ்ட தனபிராப்தி, ஆரோக்கியம், தெய்வபலம், பெரியோர் அனுக்கிரஹம், இவைகள் கிடைக்கச்செய்யும், சுபசோபனுதிகளுக்கு ஆரம்ப ஸூசனையைத்தரும். ஸதா சுப சகுனங்கள் ஏற்படும். திங்களும் புதனும் சுபவாரமாகும்.

**8. விருச்சிகம்,** விசாகம், $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விசாகத்துக்கு விருச்சிகராசிபலன் மாதக்கடைசியில் லாபத்தைத் தரும். மற்ற இரு நக்ஷத்திரங்களுக்கும் ஆரம்பம் முதலே சுபமாக நடக்கும், தூரதேசத்திலிருந்து ஆஹ்வான பத்திரம் கிடைத்தல், ராஜஸபாபிரவேசம், கௌரவபட்டங்கள், தனதான்ய லாபம், நூதனவஸ்திராபரணச் சேர்க்கை, தான தர்ம பலன், ஸ்வாதிகாரவிருத்தி, தபோபலம் எல்லாம் கிட்டும். புதனும் வியாழனும் சுபமாகும்.

**9. தனுசு.** மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

பூராடம் உத்திராடம் சம்பந்தப்பட்ட பலன் சுபத்தைத் தரும். உத்தியோக லாபம், நஷ்டதனபிராப்தி, சத்துருநாசம், ரோக நாசம், கடன் நிவர்த்தி முதலிய ஸந்தோஷங்களை உண்டு பண்ணும், மூலத்துக்கு ரோகத்தையும் கிலேசத்தையும் தந்து மாதக்கடைசியில் நன்மைகாட்டும். தெய்வபலத்தால் அசுபம் வருவதைத் தடைசெய்து, அதிக சிரமமில்லாமல் ஏற்படச் செய்யும். சனியும் வியாழனும் சுபவாரமாகும்.

**10. மகரம்.** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம்,

உத்திராடத்துக்கும் அவிட்டத்துக்கும் பூர்ணசுபமும் திருவோணத்துக்கு அதிக உழைப்பின்பேரில் ஸந்தோஷமும் ஏற்

படும். பொதுவாக மகரராசிக்காரர்கள் எல்லோருமே இம்மாதத்தில் ஸந்தோஷமும் சௌக்கியமும் அடைவார்கள். அவிட்ட மகரராசிபலன் சூதாட்டம் முதலியவைகளைக் கொடுத்து லாபத்தைத் தந்து கடைசியில் நஷ்டத்தை உண்டுபண்ணும், சனியும் ஞாயிறும் நலன்காட்டும்.

**11. கும்பம்.** அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$,

அவிட்டத்துக்கும் சதயத்துக்கும் அதிக உழைப்பும் சரீரப் பிரயாசையும், தொல்லைகளும் அதிகம் ஏற்பட்டு மாதக்கடைசி பத்து தினங்களில் சுபத்தைத் தரும். பூரட்டாதி சம்பந்தப்பட்ட கும்பராசிபலன் மிசிரமாகும், இடம் மாறும். அலைச்சலும் தேகப் பிரயாசையும் அதிக விரயமும் தரும். தெய்வபலம் காக்கும். வியாபாரியாகில் நஷ்டம் காட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு நஷ்டமும் கஷ்டமும் கொடுக்கும்படியான இடத்தில் மாற்றம் ஏற்படும். குறைவான வார்த்தைகேள்வியும் அபவாதங்களும் உண்டாகி விலகும். மாதக்கடைசி பத்துத் தினங்களில் எல்லோரும் நலனடைவார்கள். சனியும் புதனும் சுபவாரமாகும்.

**12. மீனம்.** பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

ரேவதி நக்ஷத்திரக்காரர்கள் தொல்லைகளுடனேயே லாபம் அடைவார்கள். தொழில் ஓங்கும். உபகாரம் கிட்டும். கடன் நிவர்த்தியாகும். சத்துருநாசம் ஏற்படும். ஆரோக்கியமுண்டாகும். மற்ற இரு நக்ஷத்திரக்காரர்களும் அதிகச் செலவுசெய்து கொண்டு நலனடைவார்கள். மாதம் முற்பாதியில் மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்குமே எதிர்பாராதபடி லாபங்களும் சந்தோஷமும் உண்டாகும். பிற்பாதிமுதல் சிரமத்தோடு சுகமும் காட்டும், தெய்வபலத்தால் சகலமும் சாத்தியமாகும். வியாழன் வெள்ளி நலன்தரும்.

**குறிப்பு:—** இவ்வாண்டு புரட்டாசிமுதலே உலகத்துக்கு அமைந்த கிரஹபலன் கெடுதலாக இருப்பதால் சுபகோசாரம் கூட சொல்பமாகவே பலந்தரும். அசுபகோசாரம் ஜாஸ்தியாகும். ஆகையால் மஹாஜனங்கள் நாஸ்திகமில்லாமல் ஸதா பகவத் ஸ்மரணையே செய்துகொண்டுவர நலனடைவார்கள். சுபம் உண்டாகும்.

அன்னதெனுந் தூலவுடற் சட்டமல்லை
யவையன்றிச் செவிமெய்கண்வாய் மூக்குமல்லை
மூன்னதென வுரைத்தலிறு னீதானல்லை
யுறுமவைஞா னேந்திரிய மென்றேதலாலே
மன்னியவாக் கொடுபதங்கை பாயுபத்தம்
வருகன்மேந் திரியமவை மதிநீயல்லை
யன்னியமாஞ் சத்தாதி வசனாதி யையைந்
தவையல்லை ஞானகன்மேந் தியவிடயமெனலால்.

ஐயமுறு மனமல்லை யையந்திர
வறிதருபுந் தியுமல்லை அகந்தையல்லை
மெய்யொன்று சிந்தனையாஞ் சித்தமல்லை
மிகுகுணதத் துவமல்லை விட்டவெல்லாம்வினவிற்
பொய்யின்ன வினிநனவாம் புகலுங்காலம்
புகுநியதி கலைவித்தை யராகமொடுபுருடன்
எய்துமிவை யாறும்விடக் கனவாஞ்சுத்த
வித்தையொடு மீசர்சதா சிவம்விந்துவொடுநாதம்.

இன்னவைவிட் டிடநனவிற் சுழுத்தியாகு
மிங்ஙனந்தான் காணவரு மவ்வியத்தமாயைத்
துன்னிருளா யருவாகி யுருவமாகிச்
சொல்லவரு தனுகரண புவனபோகம்
அன்னவையா மகிலமுந்தான் படைத்தளித்திட்
டழித்துயாவு மவைமறையா வருளுமவர்வெவ்வேறாகப்
பன்னும்யோ னிகளுருவா யைந்துகருமந்தான்
பண்ணவிகாரவிகார.........கைநடத்தும்.

...துமான...னலு......நனவினிற்புரிந்ததோர...
லாத்துரிய ... ... ... தையே
யோதவேதமவந்தமு ... ... றேமசியென்ன
வோதுமாறுதல்ால் தான்ம ஞானமானதேகமாகுமால்.

எனவும் பிறவும் வரும். இனி,

ஐயைந்தும் ஆன்மாவி லாறே டடங்கிடும்
மெய்கண்ட மேன்மூன்று மேவுமெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
வெய்யும் படியடங் குந்நாலே ழெய்தியே. திரும. 2239

என முற்கூறியவாறே புருடதத்துவத்தில் வித்தியாதத்துவ மாறும் ... ... பரமாயு ... யீசுவரஞ் சதாசிவ மூன்றுமடக்கிக் கொண்டு நிற்கும். வியோமமாயுஞ் சத்திசிவத்தை யடக்கிக்கொண்டு நிற்கும் பரமாயும்...ஆறு தத்துவங்களு மேற்பரோபாதியிற் கூட்டிக் கழிக்குமாற்றால் ஈண்டுச் சிவோபாதியிற் கூட்டவேண்டாவெனின், வியட்டி பேதத்தால் சீவோபாதியாயுஞ் சமட்டியுபாதியாற் பரோபாதி யாயுமிருத்தலின், வியட்டித் தூலசரீராபிமானி சீவன் விசுவ னெனவும் சமட்டித்தூல சரீராபிமானி யீசுவரன் இரண்ணிய கருப்பன் எனவும் பிறவும் வருமாறுபோல ஈரிடத்தும் வைத்துக் கழிக்கவேண்டுமென்க. இதனாற் பயன் திரோதமுத னான்கு பாசமுமொழியுமெனக் காரிய மொழியவே காரண மின்மையின். அது திருமந்திரத்தில்,

ஆறாறி லையைந் தகல நனாநனா
வாறு மவைவிட வாகும் நனக்கனா
வேறான வைந்தும் விடவே நனவினில்
ஈறுஞ் சுழுத்தி யிதின்மாயை தானே. 2197

என வந்தவாறே,

சாக்கிர சாக்கிரந் தன்னிற் றிரோதாயி
சாக்கிர சொற்பனந் தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்
சாக்கிரந் தன்னிற் றுரியத்து மாயையே. 2167

எனப் பாசம் நான்கும் கழிந்தவாறு காண்க. ஆணவம் வேறெனக் கூறாதது மாயையே யாணவமெனக் கோடலின். இவ்வாறு ஞானசித்தியிலும்,

षट्त्रिंशत्तत्त्व बोधार्थं आत्मरूपं प्रकाशितम् ।
धातुरूपे स्थितं देहं मूलरूपोऽयमुच्यते ॥
पुर्यष्टकं स्थितं सूक्ष्मं प्रकृतित्रीणि देहजम् ।
प्राणदेहं ततः पश्चात् धर्मां मोहिनिदेहजम् ॥

पञ्चकञ्चुकयोर्देहं परित्यज्य स्वरूपकम् ।
पञ्चभूतस्थितं देहं धातुरूपं प्रकल्पितम् ॥
रसरुधिरमांसास्थि मेदोमज्जा त्वक्छुक्लकम् ।
सप्तधातुं परित्यज्य श्रोत्रादि पञ्चकं त्यजेत् ॥
वागादिपञ्चकं त्याज्यं शब्दादि पञ्चकं त्यजेत् ।
वचनादि पञ्चकं त्याज्यं शब्दादि पुरुष पञ्चकम् ॥
पुरुषार्थं परित्यज्य केवलातीत सम्भवम् ।
एतत्सर्वं परित्यज्य जाग्रज्जाग्रमिति स्थितम् ॥
विद्या तत्वं परित्यज्य जाग्रस्वप्नस्थितं भवेत् ।
शिवतत्वं परित्यज्य मायामोहिनि सम्भवम ॥
तज्जाग्रत्सुप्तिर्यो भावः साक्षी पुरुषतत्वकः ।
पुरुषार्थं परित्यज्य केवलातीत सम्भवम् ॥
जाग्रज्जाग्रादिकाऽवस्था तिरोधादि मलक्षया ।
तिरोधात्यज् जाग्रजाग्रे मायेयं जाग्रस्वप्नकम् ॥
सुप्तिर्जगत्कर्म स्यान्मोहिनी जयात् ।
जाग्रातीताणवं बन्धं तत्त्याज्य मात्मनोदितम् ॥

என வரும். இவ்வாறுவருவதற் கிண்டெடுத்தோத்தின்றேனு மொன்றெனமுடித்தலாற் கொள்க. 40

41. * *

**பரனுடலம்** என்பது பரனுரு சாக்கிராதியவத்தை நான்கு மாமாறு கூறுகின்றது. ஈண்டு ... ... செப்புமிது பரனுடலங்கனு ளொன்றுதலிற் ெ ... ... பரசாக்கிர மென்பது,

அணுவின் றுரியத்து நான்குமதாகிப்
பணியும் பரதுரி யம்பயி னுங்குங்
தணிவிற் பரமாகிச் சார்முத் துரியக்
கணுவிலொர் நான்குங் கலந்தவீ ரைந்தே.

என்னும் திருமந்திரத்தானுணர்க. இனிக் காரண காரிய மென்றது **सर्वज्ञत्वं सर्वेश्वरत्वं सर्वकारणत्वं सर्वव्यापित्वं सर्वसृष्टिः सर्वस्थितिः सर्वसंहारः** என்பனவாம். அது வருமாறு பரிபூரண சித்தியில்,

அதுவெனும் பதத்தின் முக்கியமாதல் காரணவுபாதி
யெதுசகல னீச னிலங்குகா ரணன்வியாபி
பதமுழு திணையுந்தானே படைத்துக்காத் தழிப்பதாகும்
விதமிவை யேழாமென்று விளம்புவ ருளம்போயற்றோர்.

என்பதனால் உணர்க. **இவ்வேழிற் குறைவு மதிகமுமில்லை** யென்பது,

சிவ பரனுடன் ஞெம்பதந் தற்பத
மூவை யசிபத மூவேழு பாதியோ
டாவயி னச்சொரு பாதந் தடங்கவே
யோவயி னோடுத லுண்மைச் சமாதியே.

என முற்கூறிய திருமந்திரத்தானுணர்க. மற்றனைத்தும் வெளி. இனிப் பரசாக்கிர முதன்மூன்றிற்கும் வருமாறு தத்துவாமிருதத்தில்,

ஓதிய சகலஞான திகளெலா மொளிக்குந் தேய
மேதது பரமன்றன்சாக் கிரமதா மழுங்கிற் றெங்கே
யாதது பரமன்றன்பாற் கனவதா மாண்ட தெங்கே
யோதிய பரமன்றன்பா லுபாதியாஞ் சுழுத்தி காணே.

என வரும். இனிப் பரசாக்கிரமுத னான்கிற்கும் வருமாறு நிராமயதேவர் நூலின்,

சிவன் றுரியந் திகழும் பரனுக்
கேவும் நனவா மிதிற்கா லபரம்
பாவுங் கனவா மதுபர மாயத்
தோவுஞ் சுழுனை விடவொண் பரமே.

மேலா கியபர மெய்த்துரி யத்தினிற்
பாலா முணர்வே கரிபார்த் திடின
மேலா மாயை யிரண்டு மதித்திடிற்
பாலா கும்பர மோதய மாகுமால்.

# தருமபுர ஆதீனப் பிரசாரம்

(தொடர்ச்சி)

7—11—52 வெள்ளிக்கிழமை: சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் திருஞானசம்பந்தர் ஆலயத்தில் நடைபெற்றது. மேற்படி தேவஸ்தானக் கட்டளைவிசாரணை வித்வான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "திருவுள்ளம்" என்பதுபற்றியும், தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்வான், திரு V. S. குருசாமி "இருபெருங்கடல்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

8—11—52 சனிக்கிழமை; பெரும்பள்ளம் என வழங்கும் திருவலம்புரம் சிவாலயத்தில் நிகழ்ந்தது. ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் "அடைக்கலம்", வித்வான், திரு. V. S. குருசாமி "அகவிளக்கு".

9—11—52 ஞாயிற்றுக்கிழமை: திருவெண்காடு ஸ்ரீ சுவேதாரண்யேசுவரசுவாமி கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "மெய்கண்டார்", வித்வான், திரு. V. S. குருசாமி "குளக்கரையில் குழந்தை", புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் "சிவஞானபோதம்".

10—11—52 திங்கட்கிழமை: மாயூரம் ஸ்ரீவள்ளலார்கோயிலில் வேதாந்தசிரோமணி, பிர்மஸ்ரீ K. ராஜகோபாலசாஸ்திரிகள் "பக்தி", கல்லூரி மாணவர் B. கணேசன் "ஸ்தோத்திரம்".

11—11—52 செவ்வாய்க்கிழமை: மேற்படி ஆலயத்தில் சிவாகம வித்வான், சிவத்திரு. S. சுவாமிநாத சிவாசாரியார் "சிவாலய தரிசனம்", புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் "அழுகையிலும் ஆண்டவன்".

12—11—52 புதன்கிழமை: மேற்படி ஆலயத்தில் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் "சிவபோகசாரம்", பிர்மஸ்ரீ. N வெங்கட்டராமையர் "சைவத்தின் மாண்பு". அங்கங்கும் ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்கள் தேவாரபாராயணம் செய்தார்கள்.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தில் சிறப்புக்கூட்டம்

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தின் இம்மாதச் சிறப்புக்கூட்டம் 12—11—52 வியாழக்கிழமை கல்லூரிக் கட்டிடம் ஸ்ரீ அருணந்தி நிலையத்தில் நடைபெற்றது.

மாணவர்களில் G. இராமசாமி, தாயுமானவன், சொக்கலிங்கம், சாம்பசிவம் ஆகியோர்கள் 'விஞ்ஞானம்', 'பாணன்', 'புயல்', 'கவிதாசிருஷ்டி' என்னும் பொருள்கள்பற்றிப் பேசினார்கள். அன்று தலைமைவகித்துச் சிறப்பித்தவர்கள் கல்லூரி நிர்வாகக் குழுவின் அங்கத்தினரும், ஞானசம்பந்தம் பதிப்பு வெளியீட்டாளருமாக விளங்கும் பிர்மஸ்ரீ K. சுந்தரேசஐயர் அவர்கள். தமது தலைமையுரையின் முடிவில் ஐயர் அவர்கள் மாணவர்களின் பேச்சுவன்மையைப் பாராட்டியதோடு, "இத்தகைய கழகங்கள் மாணவர்கள் பேசுந்திறன் பெறச் சாதகமாயிருக்கவேண்டும். மாணவர்கள் சமய உணர்ச்சி, கடவுள் வழிபாட்டுணர்வு ஆகியன பெற்றுத் திகழவேண்டும். ஏனைய கல்லூரிகளைப்போல மொழியறிவுமட்டும் பெறுதல் மாணவர்கள் நோக்கமாக இருத்தல்கூடாது. அதற்காகவே சமயபாடமும் உங்கட்குக் கற்பிக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொருவரும் ஒழுக்கத்தில்—நேர்மையில் சிறிதும் வழுவுதல் ஆகாது. இக்கல்லூரியில் படிப்பு முடித்து ஓராண்டுக்கு வெளியேறுகின்றவர்கள் சுமார் இருபதுபேருக்குக் குறையாமலிருக்கலாம். இவ்வாறு ஆண்டுதோறும் தேறி வித்வான் பட்டம் பெற்று—சிரோமணிப்பட்டம் பெற்றுப் பல ஜில்லாக்களில் சென்று உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராக இருந்து பணிபுரிகின்றவர்கள் இன்றுவரையில் பலர் இருப்பர். இனியும் அப்படி செல்லக்கூடிய பலர் இங்கு இருக்கின்றீர்கள். அவ்வாறு செல்கின்ற நீங்கள் அங்கங்கும் சமயப்பிரசாரம் செய்வீர்களானால் அது எவ்வளவோ பயன்படும். அதுமட்டுமல்ல, ஆதீனம் செய்துவரும் சமயப்பணியின் பெரும்பாகம் நீங்கள் செய்தவர்கள் ஆவீர்கள். அச்சிறப்பெல்லாம் ஆதீனத்திற்கேயுரியது. ஆகவே உங்களைப் புலவராக்கிய ஆதீனத்தின் குறிக்கோளை நீங்கள் கொஞ்சமும் மறத்தலாகாது. இக்கல்லூரி ஏற்படுத்தியதின் நோக்கமும் இதுவே" என்பனபோன்ற அரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

கல்லூரி ஆசிரியர் வித்வான், திரு. V. S. குருசாமி அவர்கள் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவத்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 14—11—52 அன்று திருக்கோட்டாறு ஸ்ரீ ஐராவதேசுவரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—12—1952.